பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 19 சனிக்கிழமை (04.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 16



தொண்டைமானாறு கடலில்

## குளித்தவர் அலையில் சிக்கி பரிதாபமாக உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு கடலில் நீராடிய இளைஞர் ஒருவர் சுழியில் அகப்பட்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மாலாவத்தை புலோலி, வடமேற்கைச் 23

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானம்

### பயங்கரவாத சட்டத்தை தொடர முடிவு

(கொழும்பு)

கடந்த அமைச்சரவையில் முனமொழியப்பட்ட பயங்கரவாதத்தை ஒழிப்பது தொடர்பான பயங்கரவாத எதிர்ப்பு திருத்த சட்டமூலத்தை வாபஸ் பெறுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

1979ஆம் ஆண்டு இலக்கம் 48 இன் கீழான பயங்கரவாதத்தை தடுக்கும் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை இரத்து செய்வதற்கும் பயங்கரவாதத்தை தடுப்பதற்கு மான புதிய விதிகளை பிறப்பிக்கும் எதிர்பார்ப்புடன் பயங்கரவாதத்தை எதிர்ப்பு திருத்த சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை 23

### எனது ஆட்சிக்காலத்திலும்

# ஒற்றையாட்சி, புத்தசாசனத்தை தொடர்ந்தும் பாதுகாப்பேன்

### அக்கிராசன உரையில் கோட்டாபய உறுதி

(கொழும்பு)

எனது ஆட்சிக்காலத்தினுள் நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாப்பேன் என்றும் புத்தசாசனத்தை பாதுகாத்து போஷிப்பேன் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய அக்கிராசன உரையில் உறுதியளித்துள்ளார். (08,09ஆம் பக்கம் பார்க்க)



வரும் 7ஆம் திகதி வரை

## பாராளுமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் எதிர்வரும் 7ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் நேற்று காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை 23

## எதிர்க்கட்சித் தலைவரானார் சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காம் கூட்டத்தொடர் நேற்று காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இந்நிலையில் சபாநாயகர் கரு ஜெயசூரிய 23

## சிகிச்சை பலனின்றி சிறுமி உயிரிழப்பு

### வல்வெட்டித்துறையில் சோகம்

(கரணவாய்)

சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பாடசாலைச் சிறுமி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச் சம்பவத்தில் 23

## 26 ஆண்டுகளின் பின்னர் முதன்முறையாக சாதாரண எம்.பியாகினார் ரணில்

(கொழும்பு)

கடந்த 26 வருடங்களாக பாராளுமன்றத்தில் பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் என்ற அந்தஸ்த்துடன் இருந்து வந்த ரணில் விக்கிரமசிங்க, நேற்று முதல் சாதாரண பாராளுமன்ற உறுப்பினராகியுள்ளார்.

ரணில் யுகத்தின் வீழ்ச்சியென இது கருதப்படுகிறது.

நேற்று எதிர்க்கட்சி தலைவராக சஜித் பிரேமதாஸ பெயரிடப்பட்டதை தொடர்ந்து, கடந்த 26 வருடங்களை பிரதமர், எதிர்க்கட்சி 23



ஆளும் கட்சி எம்.பி

## எதிர்க்கட்சிக்கு தாவினார்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று புதிதாக சத்தியப்பிரமாணம் செய்த வருண லியனகே, எதிர்க்கட்சி வரிசைக்கு 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

## பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான ஆசனப் பங்கீடு சுமுகமாக முடிவு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான பாராளுமன்ற ஆசனப் பங்கீடு தொடர்பான இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டது.

கடந்த இரண்டு கூட்டங்களாக பாராளுமன்ற ஆசனப்பங்கீட்டில் இழுபறி நிலவி வந்த நிலையில் நேற்று நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட் 23

## ஜனாதிபதி, பிரதமருடன் சம்பந்தன் சந்திப்பு



(கொழும்பு)

பாராளுமன்றில் இடம்பெற்ற விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் தமிழ்த் 23

ஐஸ் போதையுடன்

## முல்லையில் இருவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். 23

## பலமான நிறைவேற்றதிகாரத்தை உருவாக்க அரசியலமைப்பில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும்

### ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

(கொழும்பு)

மக்களின் இறையாண்மை உறுதிப்படுத்தப்படும் வகையில், பலமான நிறைவேற்றதிகாரம், பாராளுமன்றம் மற்றும் சுயாதீன நீதிமன்றத்தை ஸ்தாபிப்பதற்கு அரசியலமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். 23

சிங்கள மொழியில்

## தேசிய கீதம் 69 இலட்சம் பேர் விரும்புகின்றனர்

(கொழும்பு)

சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் இசைக்கப் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

(C-8838)

## விற்பனைக்கு

பாவித்த பனைமரம், ஓடுகள் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**077 690 6613**

(C-8833)

## வேலை வாய்ப்பு

1. தாதிய அனுபவம் உள்ளவர்கள்.
2. ஆங்கில மருந்துகளில் அனுபவம் உள்ளவர்.

**077 873 0129**

(1729)

## USED MEDICAL EQUIPMENTS SALE


1. Blood Analyzer Pointe 180
2. X-Ray Machine 60MA (Mobile)
3. Autoclave (Three Drum, Manuval)
4. Pulse Ofidmeter

**077 873 0129**

(C-8841)

# மரண அறிவித்தல்கள்

| மலர்வு | | மறைவு |
|---|---|---|
| 30 | | 02 |
| 05 | | 01 |
| 1926 | | 2020 |



## வேலுப்பிள்ளை கந்தசாமி


சங்குவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 02.01.2020 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் ரஞ்சிதமலரின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சூசைபாக்கியம் அவர்களின் அன்புச் சகோதரனும், ராஜேஸ்வரன், ரவீந்திரன், சுரேந்திரன், ராஜினி, பிறேமினி, ரஞ்சித், விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதை, வதனி, நிர்மலா, குணரெட்ணம், உதயகுமார், பேபிராணி, சுலக்ஷனா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(1727)

சங்குவேலி. 077 064 1056 / 076 865 2187 குடும்பத்தினர்



## மனுவேல் நாகேந்திரம்

மூத்தம்பி விதி மானிப்பாயை பிறப்பிடமாகவும் 31 V பொதுக் கிணறு வீதி தோணிக்கல் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேல் நாகேந்திரம் அவர்கள் 02.01.2020 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேல் - முத்தம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் தம்பிஐயா, நேசமணி, செல்வராசா, சிவமணி, காலஞ்சென்ற பாலரட்ணம் ஆகியோரின் பாசமிகு அண்ணனும், ராசதேவியின் அன்புக் கணவரும், ரஜேன், ஜேந்தன், நளினி, குகன் (குட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தோணிக்கல் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31,V, பொதுக்கிணறு வீதி,
தோணிக்கல். (1724) குடும்பத்தினர்.

## தேசமான்ய M.T.S.இராமச்சந்திரன் அவர்கள் வடமாகாண ஆளுநரின் நியமனத்திற்காக மாண்புமிகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நன்றி தெரிவிக்கின்றார்.



இந்து பௌத்த கலாச்சார பேரவை வடமாகாண ஆளுநர் நியமனத்திற்கு அதி விசேட நன்றியை ஜனாதிபதிக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். கௌரவ திருமதி P.S.M.சாள்ஸ் நிர்வாக சேவையில் (SLAS) மூத்த அதிகாரி என்ற வகையிலும் வடக்கு மாகாணத்தில் பிறந்த தமிழ்ப் பெண்மணி என்ற வகையிலும் அவர் இதுவரை வடமாகாணத்தில் இருந்த ஆளுநர்களில் மிகவும் சிறப்பானவர் என்பதையும் இந்த வேண்டுகோளை ஆளுநர் தெரிவின் போது ஏற்கனவே இந்து பௌத்த கலாசாரப் பேரவை ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளது. அவரின் நியமனத்தை வரவேற்று இந்து பௌத்த கலாசாரப் பேரவையில் இதுவரை கல்விகற்கும் மாணவர்களான இளைஞர், யுவதிகள் 19000 பேர் முழுமனதுடன் வரவேற்கின்றோம். அவரின் வடபகுதி அபிவிருத்திக்கும் மற்றும் அனைத்து நல்ல முயற்சிக்கும் எங்களால் பூரண ஆதரவை வழங்க தயாராகவுள்ளோம். இந்த விடயத்தை மிக எளிமையான முறையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வடபகுதி மக்களிற்கு வடக்கு மாகாணத்தில் பிறந்த ஒருவருக்கு மட்டும் தான் வடக்கு மாகாண ஆளுநர் பதவி கொடுப்பது 100% பொருத்தமானது என இந்து பௌத்த கலாச்சாரப் பேரவையின் சார்பில் ஆளுநரை வரவேற்பதுடன் ஆதரவையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தேசமான்ய M.T.S.இராமச்சந்திரன்**
**பொதுச் செயலாளர், இந்து பௌத்த கலாச்சார பேரவை.**

(C-8837)

# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## விஜயகுமார் சர்வேஸ்வரி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 27 - 06 - 1969 | 25 - 12 - 2009 |

சோகத்தின் சுமையதனை
சுமக்கின்றோம் இதயமதில்
பாசத்தின் உறவுகள் நாம்
பரிதவித்து வாடுகின்றோம்
நேசத்தை மறந்தது ஏன்
நெடுந்தூரம் சென்றீர்களோ?

உங்கள் பிரிவால்
மகள் - ராஜராஜன் - ஜர்திகா
மகன் - வி.ஜதீபன், தாய் - செ.சிதம்பரம்
பேர்த்திகள் - அக்ஷிரா, அஷ்மிரா.

அக்ஷிரா பவன்,
ஆவரங்கால்.
04.01.2020

(C-8839)

# வடக்கு மாகாணத்தில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

## ❖2019 இல் 5247 பேருக்குச் சிகிச்சை ❖70 பேர் உயிரிழப்பு!

## சுகாதாரப் பணிமனை அதிர்ச்சித் தகவல்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த நிலையில் கடந்த (2019) ஆண்டு மாத்திரம் 5ஆயிரத்து 247 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் அதில் 70 பேர் உயிரிழந்ததாகவும் யாழ்.பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிமனையின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.**

தெல்லிப்பழைப் புற்றுநோய் வைத்தியசாலையை அடிப்படையாகக் கொண்டு குறித்த அதிர்ச்சித் தகவல் வெளிவந்தது.

கடந்த வருடம் (2019) அதற்கு முந்திய வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதீத அதிகரிப்புக் காணப்படுகின்றமையை புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.


2017 ஆம் ஆண்டு தெல்லிப்பழைப் புற்றுநோய் வைத்தியசாலையில் 4 ஆயிரத்து 36பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் 54 பேர் உயிரிழந்தனர்.

2018 ஆம் ஆண்டு சிகிச்சைக்காக 4 ஆயிரத்து 430 பேர் அனுமதிக்கப்பட்ட நிலையில் 74 பேர் உயிரிழந்தனர்.


2019 ஆம் ஆண்டு குறித்த வைத்தியசாலையில் 5 ஆயிரத்து 247 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் 70 பேர் உயிரிழந்தமை 2017, 2018 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்ததைக் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஹப்புத்தளையில் விமானம் விழுந்து நொறுங்கியது

## நால்வரின் சடலங்கள் மீட்பு








(ஹப்புத்தளை)

ஹப்புத்தளை பகுதியில் இலங்கை விமானப்படைக்கு சொந்தமான சிறியரக விமானமொன்று விபத்துக்குள்ளாகினது. வீரவில பகுதியிலிருந்து நேற்றுக் காலை பயணித்த இலங்கை விமானப்படைக்கு சொந்தமான Y12 ரக விமானமே இவ்வாறு விபத்திற்குள்ளானது.

இந்நிலையில் குறித்த விமான விபத்து இடம்பெற்ற பகுதியில் இருந்து 4 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் 175 பேர் கடற்படையினரால் கைது

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நோக்கிப் பயணிக்கும் இலங்கையைச் சேர்ந்த சட்டவிரோத குடியேற்ற வாசிகளின் எண்ணிக்கை அதிகரித்த நிலையில் இலங்கைக் கடற்படை, விமானப்படை மற்றும் அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்பு படையுடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியுள்ளது.

2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இலங்கையைச் சேர்ந்த 64 சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் நாட்டை விட்டு வெளியேற முயன்றதாக இலங்கைக் கடற்படை தெரிவித்தது.

இதேவேளை கடந்த ஆண்டில் சுமார் 175 சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் நாட்டை விட்டு வெளியேற முற்பட்ட போது கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் அதிகமானோர் சிலாபம் மட்டக்களப்பு தெய்வேந்திரமுனை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என கடற்படை ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுரு சூரியபண்டார தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டை விட்டு சட்டவிரோதமாக வெளியேற தயாராகிக் கொண்டிருந்த நிலையிலும் எமது கடல் பிரதேச எல்லைகளுக்குள் வைத்தும் இவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

கடற்படையின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை கடல் பிரதேசத்தில் அண்மையில் 4 பேர் தப்பிக்க முயற்சித்த சம்பவத்தை மேற்கோள்காட்டிய கடற்படைப் பேச்சாளர், ஆட்கடத்தல் மற்றும் மக்கள் கடலில் தமது உயிரைப் பணயம் வைப்பதை தடுக்கும் வகையில் இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கங்கள் ஒரு வலுவான உறவைப் பகிர்ந்து கொண்டு பணியாற்றி வருவதாக இலங்கை விஜயத்தின் போது அவுஸ்திரேலிய எல்லை பாதுகாப்புப் படை தளபதி மேஜர் ஜெனரல் கிரெய்க் புரினி தெரிவித்திருந்ததை இங்கு சுட்டிக் காட்டினார்.

நீங்கள் உயிரைப் பணயம் வைத்து மேற்கொள்ளும் இப்பயணத்தின் மூலம் உங்களுக்கு எவ்வித நன்மைகளும் கிட்டப் போவதில்லை. அவுஸ்திரேலியா மிகக் கடுமையான எல்லைப் பாதுகாப்பு கொள்கைகளை கடைப் பிடிப்பதால் படகில் சட்ட விரோதமாக பயணிக்கும் எவரும் அவுஸ்திரேலியாவில் வாழ்வோ அல்லது வேலை செய்யவோ அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் மேஜர் ஜெனரல் புரினி கூறினார்.


மேலும் இங்கு கருத்து வெளியிட்ட கடற்படைப் பேச்சாளர் இது போன்ற சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க மீனவர் சமூகம் தகவல்களை வழங்கி தமது முழுமையான ஒத்துழைப்பை நல்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தொடர்பான தகவல்களை வழங்கும் நபர்கள் தொடர்பாக இரகசியத் தன்மையை இலங்கை கடற்படை பேணும் எனவும் அவர் உறுதியளித்தார். (இ-7)

# மரண அறிவித்தல்

## முத்துக்குமாரு விஜயரகுநாதன்

**(ஓய்வு நிலை கணக்காளர்-யாழ் செயலகம்,யாழ் போதனா வைத்தியசாலை)**



இணுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மு.விஜயரகுநாதன் நேற்று(03.01.2020) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு-செல்லம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ் சென்றவர்களான ஆசிரியத் தம்பதிகளான ஆறுமுகம்-சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும் குககுமாரியின்(ஓய்வு பெற்ற அதிபர்-நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்) அன்புக்கணவரும், திருமதி லாவண்யா மயூரேஷன் (ஆசிரியை, கொழும்பு றோயல் கல்லூரி), ஸ்ரீவிசாகன் (விரிவுரையாளர்-பல்கலைக்கழககல்லூரி-மாத்தறை), ஸ்ரீவித்தகன்(உயிரியல் மருத்துவப்பொறியியலாளர்-யாழ் போதனா வைத்தியசாலை) அகியோரின் பாசமிகு தந்தையும் வைத்தியநிபுணர் A.P மயூரேசன்(தள வைத்தியசாலை-புத்தளம்),திருமதி சிறீ சுபரம்யா (விரிவுரையாளர்-வவுனியா வளாகம்-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, ஆ.குகமூர்த்தி, இ.கோணேஸ்வரி, ஆறுதிருமுருகன், ந.விக்கினேஸ்வரி, ஆ.கேதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஸ்ரீஞானலக்சுமி, கு.சசிகலா, காலஞ்சென்ற ஆ.இராமச்சந்திரன், இ.நரேந்திரா, சி.ஆனந்தரட்ணம் அகியோரின் சகலனும் கோகுலன், கேதுஷா, வினோஜி, உஷேனி, விதுஷன், தர்மிதா ஆகியோரின் பெரியப்பாவும் மனைவி வழியே Dr.சொ.கமலகுமார், தாயினி,விசாரதன், வேதப்பிரியன் ஆகியோரின் மாமாவும் லிவிராம், கல்கி, தனிஷ்சவின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுகிக்கிரியைக்ள் 246/4A, கோயில்வீதி,நல்லூர் இல்லத்தில் நாளை(05.01.2020) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணிக்கு இணுவில் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

246/4A,கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

தகவல்:-திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(மைத்துனர்)
0778332001/0212227225

# மரண அறிவித்தல்

## ஆச்சிப்பிள்ளை நடராசா

(இளைப்பாறிய ஆசிரியை- யாழ் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், சுழிபுரம்)



யாழ்.பண்ணாகத்தைப் பிறப்பிட மாகவும், ஐக்கிய அமெரிக்கா (Newyork) பண்ணாகம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ஆச்சிப்பிள்ளை நடராசா அவர்கள் 02.01.2020 வியாழக்கிழமை அன்று பண்ணாகத்தில் இறைவனடி அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாள பரமு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இளையதம்பி நடராசா (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், கலையரசி (நியூயோர்க் ஐக்கிய அமெரிக்கா), தமிழரசி (ஐக்கிய இராச்சியம்), கதிர்காமத்தம்பி (நியூயோர்க் ஐக்கிய அமெரிக்கா), செல்வகாந்தன் (சுவிஸ்), அன்பரசி (ஐக்கிய இராச்சியம்), முருகதாஸ் (நியூயோர்க் ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற வள்ளியம்மை அப்புத்துரை (சிங்கப்பூர்) அவர்களின் அன்புச் சகோதரியும், கருணாகரன் (நியூயோர்க் ஐக்கிய அமெரிக்கா), ஜெயதாசன் (ஐக்கிய இராச்சியம்), உஷா நந்தினி (நியூயோர்க் ஐக்கிய அமெரிக்கா), சாந்தி (சுவிஸ்), ஜெயக்குமாரன் (ஐக்கியஇராச்சியம்), சாரங்கா (நியூயோர்க் ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற இராசையா, தம்பிஜயா, காலஞ்சென்ற சற்குணம், பாக்கியம், சிவராசா, காலஞ்சென்றவர்களான தங்கராசா, செல்வராசா, சின்னராசா ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சௌமியா, நவீன், நர்த்தன், சாரங்கன், சாம்பவி, ராகவி, ராதவன், அனுஷ், ஆரபி, நந்தனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2020) முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,சுழிபுரம். தகவல் : ந.முருகதாஸ் (மகன்) 076 2988781

# எதிர்கால கப்டன் இவர்தான்-பொன்ரிங்

டெஸ்டில் கிரிக்கெட்டில் அசத்தி வரும் லாபஸ்சாக்னேவை அடுத்த ஆஸ்திரேலிய அணி கேப்டனாக பார்க்கிறேன் என்று ரிக்கி பாண்டிங் தெரிவித்துள்ளார்.

டேவிட் வார்னர், ஸ்மித் தடையின்போது ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணி மிகப்பெரிய அளவில் தடுமாறியது. அவர்கள் வந்தபின் ஆஷஸ் தொடரில் இருந்து அந்த அணி வேகம் எடுத்துள்ளது.

ஆஷஸ் தொடரின்போது ஸ்மித்திற்கு மாற்றாக வந்த மார்னஸ் லாபஸ்சாக்னே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் 3-வது இடத்தை தக்க வைத்துக் கொண்டார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் கோடைக்கால சீசனில் ரன்மேல் ரன் குவித்து வருகிறார். பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு டெஸ்டிலும் சதம் அடித்த லாபஸ்சாக்னே, நியூசிலாந்துக்கு எதிரான பெர்த் டெஸ்டிலும் சதம் அடித்தார்.

டிம் பெய்ன் இன்னும் ஒரு வருடம் கேப்டனாக இருக்க நான் ஆதரவு கொடுப்பேன். அவருக்கு 35 வயதாகிறது. ஆனால் கிரிக்கெட் வரைமுறையின்படி அவர் இன்னும் இளமையாக இருக்கிறார்.

## முகாமைத்துவ உதவியாளர் தேவை

வெளிநாட்டுமொழிகற்பிக்கும் நிறுவனத்திற்குA/L 3 சித்தியுடன் 6kmக்குள் வசிக்கும் பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளோர் இன்று(04.01.2020) சனிக்கிழமை 3..30மணிக்குCV யுடன் நேரில்வரவும்.

No.19,Palaly Road,ஆரியகுளம்
T.P:0769370456

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## கப்டனாக டோனி

கடந்த 10 ஆண்டுகளில் (2010 முதல் 2019 வரை) விளையாடிய வீரர்களில் தலை சிறந்த வீரர்களை கொண்டு கிரிக்கெட் விமர்சகர்கள், பத்திரிகைகள் மூலம் சிறந்த அணிகள் வெளியிடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்திய அணிக்காக தொடக்க வீரராக களம் இறங்கிய பேட்ஸ்மேன் ராபின் உத்தப்பா சிறந்த ஒருநாள் கிரிக்கெட் அணியை வெளியிட்டுள்ளார். எம்எஸ் டோனிக்கு கேப்டன் பதவியை கொடுத்துள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி



ஆசிரியர் இ.பரணிதரனின்
அன்புச் சகோதரன்
**இரத்தினசிங்கம் குருபரன்**
(சாரதி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1728)

ஆழ்ந்த துயருடன்
ஆசிரிய நண்பர்கள்,
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

## வடக்கு மாகாண ஆளுநர் திருமதி P.S.M சாள்ஸ் அம்மாவை பாராட்டி வாழ்த்துகின்றோம்




பண்பான தமிழ் அரங்கே
வட மாகாணத்தின் தமிழ்முத்தே
ஆளுநர் கதிரியை அலங்கரிக்கும் தாயே
வட மாகாணத்தின் துயர் துடைக்கும் சக்தியே
என்றென்றும் உம் பணிசிறக்க வாழ்த்துகின்றேன்

அ.ஸ்ரீகரன் J.P
முன்னை நாள் ஓமந்தை மத்திய கல்லூரி அதிபரும் வவுனியா வடக்கு கல்வி வலயம், வடமராட்சி கல்விவலயத்தின் ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர்.

கரவெட்டி.
T.P : 0774349105

# யாழ்ப்பாணம் விமான நிலைய விவகாரம் உரிய தீர்வு கிடைக்கப் பாடுபடுவேன்



## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்ச்வதேச விமான நிலையத்தால் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தெளிவுபடுத்தியதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் அதனால் வடபகுதி மக்களுக்கும் ஏனைய பகுதி மக்களுக்கும் கிடைக்கக்கூடிய நன்மைகள் உரிய வகையில் கிடைக்கப்பெற வேண்டும்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கும் தமிழ்நாட்டு விமான நிலையத்துக்குமான கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும்.

அத்தோடு பயணிகள் கொண்டு செல்லும் பொருட்களின் நிறை மட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி முன்னிலையில் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு தெளிவுபடுத்தினேன்.

அதுமட்டுமல்லாது கிளிநொச்சியில் அமைந்துள்ள ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் பிரச்சினைகள் தொடர்பிலும் அமைச்சரவைக்குத் தெளிவுபடுத்தினேன்.

அதாவது குறித்த பயிற்சி நிறுவகத்தில் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான தொழில்நுட்ப வசதிகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினேன்.

எனவே எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த விடயங்கள் தொடர்பில் துறைசார் அமைச்சர்கள் தீர்வுகளை முன்வைப்பார்கள் என நம்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

---

## ஐ.தே.க.படுதோல்வியடையும்

# பொதுத்தேர்தல் குறித்து அரசு ஆர்வமாகவுள்ளது

## அமைச்சர் ஜோன்ஸ்டன் வெளிப்படுத்தல்



(குருநாகல்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர்தல்களை எதிர்கொள்ள ஆர்வத்துடனிருக்கிறது. இத்தருணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக யார் தெரிவு செய்யப்பட்டாலும் பொதுத்தேர்தலில் அக்கட்சி படுதோல்வியடையும் என்பதில் சந்தேகமில்லை என்று துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் வீதி, பெருந் தெருக்கள் அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சஜித் பிரேமதாஸ போன்ற தூரநோக்கு சிந்தனையற்ற தலைவரொருவர் ஐக்கிய தேசியக் கட்சியின் அண்மைய வரலாற்றில் தோன்றவில்லை. ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த மறுகணம் பொதுத் தேர்தலுக்கு செல்ல வேண்டியுள்ளது. அவர்களின் பிரச்சினைகளை அவர்களாலேயே தீர்க்க முடியவில்லை.

எப்போது தேர்தல் நடந்தாலும் தாம் தோல்வியடைவோம் என்பதை அவர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள். மாகாண சபைத் தேர்தலையும் நடத்தவில்லை. அதற்கு முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தினார்கள்.

அதனையும் உரிய நேரத்தில் நடத்தாது காலம் தாழ்த்தினார்கள்.

தேர்தலை காலம் தாழ்த்துவதன் ஊடாக தப்பித்து விடலாமென நினைத்தார்கள். இறுதியில் என்ன நடந்தது? ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக அழிவடைந்ததுடன் அக்கட்சிக்கு கிராமத்தில் காணப்பட்ட ஆதரவு எமது அணியினரின் கரங்களுக்கு மாறியது.

ஐ.தே.கவினர் தமக்குள்ளேயே முரண்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எதிர்க்கட்சிக்குத் தலைவர் பதவி தொடர்பில் முரண்படுகின்றார்கள்.

கட்சித் தலைமைத்துவத்திற்கு முரண்படுகின்றார்கள். ஐக்கிய தேசியக்கட்சி இரண்டு மூன்று துண்டுகளாகப் பிளவடைந்துள்ளது. பொதுஜன பெரமுன தேர்தல்களை எதிர்கொள்ளத் தயாராகவுள்ள கட்சியென்பதால் எச்சந்தர்ப்பத்திலும் தேர்தலை நடத்த நாம் தயாராகவே இருக்கின்றோம் என அவர் மேலும் தெரவித்தார். (இ-7)

---

# விசேட நுளம்பு கட்டுப்பாட்டு நிகழ்வு எதிர்வரும் 7ம்,9ம்,11ம் திகதிகளில்

(யாழ்ப்பாணம்)

விசேட நுளம்புக்கட்டுப்பாட்டு நிகழ்வு எதிர்வரும் 7 ஆம், 9 ஆம், 11 ஆம் திகதிகளில் யாழ். மாநகரசபை பிரிவில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு பரவலிலிருந்தும் நோய்த்தாக்கத்திலிருந்தும் விடுபட முடியும்.

இந்தத் தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புக்கள் வழங்கி தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுச்சூழ்லை துப்புரவாக பேணுமாறும் இம்முறை டெங்கு நுளம்பு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு நுளம்பு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

களத்தரிசிப்பு, 07.01.2020 நாவாந்துறை (ஜே/87), 09.01. 2020 வண்ணார்பண்ணை (ஜே/104), 11.01.2020 குருநகர் (ஜே/69) என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

---

# கற்கைநெறி அறிமுகக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் எந்திரவியல் பட்டக்கற்கை நெறி (Bachelor of Engineering Technolgy) மற்றும் விஞ்ஞானமாணி பட்டக்கற்கை நெறி (Bachclor of Science) ஆகியவற்றுக்கான அறிமுகக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் இடம்பெறும்.

இக் கருத்தரங்கில் கற்கை நெறி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதனால் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மற்றும் விண்ணப்பிக்க ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

---

## இராசி பலன்

**04.01.2020**

மார்கழி 19, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு

நவமி பின்னிரவு 12.21 மணிவரை

ரேவதி முற்பகல் 9.26 மணிவரை

சுபநேரம் 3.31-5.01 மணிவரை

இராகுகாலம் 9.31-11.01 மணிவரை

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ராகு |
| | | | |
| சுக் | | | |
| சூரி, சனி புத. குரு, கேது | செவ் | | |

சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை

வளவன்

**மேடம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை அமையலாம், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சயன சுகக் குறைவான நாள்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, மனதில் இனம் புரியாத சந்தோசம் குடி கொள்ளும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், கௌரவமான நாள்.

**கடகம்:** மனதில் உற்சாகமும் மகிழ்சியும் அதிகரிக்கும், வெறுத்து ஒதுக்கிய சிலரே உங்களிடம் விரும்பி வந்து சேரலாம், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்:** உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்:** நல்ல செய்திகள் நாடி வரும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், உடல் நலன் சீராகும்.

**விருச்சிகம்:** விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தூரத்து உறவினர்களின் சந்திப்புண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு.

**தனுசு:** நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய நட்பு கிடைக்கும்.

# “நமது கிராமத்தை நாம் அழகுபடுத்துவோம்”

## முன்னணி உறுப்பினர் முன்மாதிரி



(குப்பிழான்)

வலி.தெற்குப் பிரதேச சபையின் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏழாலை மூன்றாம் வட்டார உறுப்பினர் டெனிஸ் கமல்ராஜ், புதுவருடத்தை முன்னிட்டு மேற்படி வட்டாரத்தில் திண்மக் கழிவகற்றல் மற்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளைத் தனது சொந்த நிதிச் செலவில் முன்னெடுத்து வருகிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கிராமத்து இளைஞர்கள் சிலரின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமாகிய மேற்படி செயற்பாடுகள் நேற்று முன்தினம் நான்காவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டன.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் குறித்த கற்றல் செயற்பாடுகள் ஒழுங்காக மேற்கொள்ளப்படவில்லையெனப் பிரதேச சபை உறுப்பினர்களாலும் பொதுமக்களாலும் தொடர்ச்சியாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

இந்நிலையில் புதுவருடத்தை முன்னிட்டு “நமது கிராமத்தை நாம் அழகுபடுத்துவோம்” எனும் தொனிப்பொருளின் கீழ் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் கமல்ராஜ் ஆரம்பித்த திண்மக் கழிவகற்றல் மற்றும் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளில்



செயற்பாடுகளை நேரடியாகப் பார்வையிட்டதுடன் தானும் இணைந்து மேற்படி பகுதியில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டார்.

வலி.தெற்குப் பிரதேச சபை ஏழாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் திண்மக் கழிவ கிராமத்து இளைஞர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். இதன்போது வீதியோரமாகவுள்ள டெங்கு நுளம்பு பெருகக் கூடிய பற்றைகள் வெட்டப்படுவதுடன் குப்பைகளும் சிரமதானம் மூலம் அகற்றப்பட்டன. (இ-18)

# எழுத்தாளர் ஊக்குவிப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2020 ஆம் ஆண்டிற்கான எழுத்தாளர் ஊக்குவிப்பு செயற்றிட்டம் (நூல் கொள்வனவு) மற்றும் தேசிய கையெழுத்துப் பிரதிப்போட்டி ஆகியவற்றிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவை தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றுள்ளன. இப்போட்டிகளுக்கான முடிவுத்திகதி முறையே 15.02.2020 மற்றும் 31.05.2020 ஆகும். நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இலக்கியத்துறை சார்ந்த கலைஞர்கள் குறித்த போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)

# ஐந்தாவது உபகுழுவாக சிறுவர் அபிவிருத்திக்குழு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையில் ஐந்தாவது உப குழுவாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திக் குழு உருவாக்கப்பட்டது.

பிரதேச சபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் 2020 ஆம் ஆண்டிற்கான உப குழுக்கள் தெரிவின் போது ஈ.பி.டி.பி. உறுப்பினர் மல்லிகாவின் கோரிக்கைக்கு அமைவாக ஐந்தாவது குழுவாக மகளிர் குழுவை அமைக்க சபை சம்மதம் தெரிவித்தது.

ஏற்கனவே சபையில் நிதிக் குழு, அபிவிருத்திக் குழு, தொழில்நுட்பக் குழு மற்றும் சுகாதாரக் குழு ஆகிய நான்கு உப குழுக்கள் உள்ளன.

குறித்த நான்கு குழுக்களுடன் ஐந்தாவது குழுவாக பிரதேச சபையிலுள்ள பெண் உறுப்பினர்களை உள்ளடக்கி மகளிர் குழு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். ஏனைய சில சபைகளிலும் மகளிர் குழு உருவாக்கப்பட்டு அந்தக் குழுவின் ஊடாக பெண்கள் நலன் சார்ந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என உறுப்பினர் மல்லிகா சுட்டிக்காட்டியிருந்தார்.

உறுப்பினரின் கோரிக்கையை ஏற்ற சபை ஐந்தாவது குழுவிற்கு தமது அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. சாவகச்சேரி பிரதேச சபையின் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திக் குழுவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெண் உறுப்பினர் பாரத்பத்மா தவிர ஏனைய ஏழு பெண் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். சாவகச்சேரி பிரதேச சபையின் உப குழுக்களிலிருந்து சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)




# முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் அபிவிருத்திச் சபையும் சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்தும் முத்தமிழ் விழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் காரை இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காரை அபிவிருத்திச்சபை தலைவர் இ.சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் செயற்றிட்டப் பணிப்பாளர் க.பத்மானந்தன், தீவக வலயக்கல்வி பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பண்டிதை யோ.சோமசுந்தரம், கௌரவ விருந்தினர்களாக பிரபல வர்த்தகர் கலைமாடக்கோன் ச.சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-114)

# பதவிக்கு வரும் போது நல்லவர்களாக வருவார்கள் போகும் போது கவலையுடன் செல்ல வைப்பார்கள்

## ஆளுநர் கடமை ஏற்பு வைபவத்தில் சிவஞானம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பதவிக்கு வருபவர்கள் நல்லவர்களாக வந்தாலும் அவர்கள் எல்லோரும் போகும் போது கவலையுடன் செல்ல வைக்கும் பழக்கம் எம்மிடம் இருப்பதாக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.


வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் நேற்று முன்தினம் யாழிலுள்ள அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டதன் பின்னர் பணியாற்றிய ஆளுநர்கள் அனைவருடனும் சேர்ந்து பணியாற்றியிருக்கின்றேன்.

அவர்கள் வரும் போது நல்லவர்களாக வருவார்கள். பின்னர் இங்குள்ளவர்கள் சேர்ந்து நல்லவராய் வருபவரை கவலையுடன் செல்ல வைக்கும் பழக்கம் காணப்படுகிறது.

இதை நான் புதிய ஆளுநருக்கு முன்னெச்சரிக்கையாகச் சொல்லி வைப்தோடு அவரின் நிர்வாகத் திறமை சகல அதிகாரிகளையும் திறம்படச் செயற்படுத்த உதவும்.

கிடைத்திருக்கும் ஆளுநர் பதவி பல்வேறு சவால்களையும் தாண்டி தமிழ் மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய பதவி ஆகையால் வடக்கு மாகாணத்தின் உயிர்ப்புள்ள ஆளுநர் என்ற ரீதியில் அவர் திறமையாகச் செயற்படுவார் எனத்தான் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)








தேசிய நீர் வழக்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய ஊழியர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் பசுமைப் புரட்சி எனும் செயற்றிட்டத்தின் கீழ் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீரேந்து பிரதேசமான அல்லைப்பிட்டியில் அண்மையில் யாழ்ப்பாண பொறுப்பதிகாரி திருமதி சு.தாரகாவின் ஒழுங்கமைப்பில் யாழ்.மாவட்ட பொறியியலாளர் நா.இளஞ்செழியன் தலைமையில் 35 தென்னங் கன்றுகள் நாட்டப்பட்டன.

# அரச நாடக விழாவிற்கான இரண்டாம் சுற்று இம்மாதம்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் இவ்வருடத்திற்கான (2020) அரச நாடக விழாவிற்கான இரண்டாம் சுற்றுப் போட்டிகள் இம் மாதம் இடம்பெறவுள்ளன.

முதல் சுற்றுப் போட்டிகள் முடிவுற்ற நிலையில் தெரிவு செய்யப்பட்ட 10 குறுநாடகங்களும் 6 நெடு நாடகங்களும் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

இதன்படி இரண்டாம் சுற்றுப் போட்டிகள் சங்கானை மத்திய கலாசார நிலையத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குறுநாடகமும் மறுநாள் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நெடு நாடகமும் இடம்பெறவுள்ளது. குறித்த போட்டியில் தெரிவு செய்யப்படும் நாடகங்கள் கொழும்பில் இடம்பெறும் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறும். (இ-10)

# ஆபிரிக்காவுக்கான விசேட தூதுவராக கணநாதன் நியமனம்



(கொழும்பு)

ஆபிரிக்காவுக்கான விசேட தூதுவராக வேலுப்பிள்ளை கணநாதன் நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனப் பத்திரத்தை கணநாதனுக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று அலரிமாளிகையில் வைத்துக் கையளித்தார்.

வேலுப்பிள்ளை கணநாதன் உகண்டாவில் இலங்கையின் தூதுவராகக் கடமையாற்றும் அதேவேளை அவர் உகண்டாவுக்கான இலங்கையின் முன்னாள் உயர்ஸ்தானிகர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கோட்டாபய அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர்கள் நியமனம்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர்களான கெஹலிய ரம்புக்வெல மற்றும் மகிந்தானந்த அலுத்கமகே ஆகியோர் அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார். (இ-7)





# க.பொ.த.(உ/த) பரீட்சை பெறுபேறு-2019

**யா/முத்துதம்பி மகா வித்தியாலயம்**

**வர்த்தகப் பிரிவு**

த.வேணுஜா-ஏ2பி, க.கோபிஸா-3பி, ஜெ.யசோதா-2பிசி, சி.பிறிஞ்சியா-2பிசி, செ.சந்தியா-2சிஎஸ்,

**கலைப்பிரிவு**

சு.மயூரி- 3ஏ, கோ.சானுயா-ஏ2பி, யோ.கோகுலவாணி-2ஏசி, ச.சன்சிகா-ஏ2சி, செ.நிவேதினி-ஏபிசி, தே.நிரோசா- பி2சி, கு.சயந்தன்-ஏ2எஸ், ஸ்ரீ.மதன்ராஜ்-பிசிஎஸ்.

# கஞ்சா சேனை சுற்றிவளைப்பு

(மொனராகலை)

மொனராகலை எதிமலை பொலிஸ் அதிகாரத்திற்குட்பட்ட யால வனப்பகுதியின் கெபிலித்த ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள ஈரியகொல்ல வனப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்த பாரியளவான கஞ்சா சேனை ஒன்று எதிமலை பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இந்த கஞ்சாச் செடிகள் சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த நிலையில் இதன்போது சுமார் 13 ஆயிரத்திற்கும் அதிகமான கஞ்சா செடிகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன் பெறுமதி 150 இலட்சம் ரூபாய்க்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிமலைபொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட புலனாய்வுத் தகவல் ஒன்றுக்கு அமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் எதிமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2செவ்8 ல்<br>உயரம்:168cm<br>தகைமை/தொழில்:A/L, London<br>எதிர்பார்ப்பு:London PR<br>தொ.இ: B/10372 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம் : கேட்டை 3 சூரி செவ் 11 இல்<br>உயரம்:5'4''<br>தகைமை/தொழில்:BBM பட்டதாரி<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி<br>தொ.இ: G/10390 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம் : பரணி 2கி.பா: 9<br>உயரம்:5'10''<br>தகைமை/தொழில்:A/L, CANADA<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/10373 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம் :ரேவதி 1<br>கி.பா: 21செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:B.Sc, Engineer<br>எதிர்பார்ப்பு:Doctor, Engineer<br>தொ.இ: G/10391 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம் : உத்தராடம் 2<br>கி.பா: 26<br>உயரம்:5'7''<br>தகைமை/தொழில்:BA, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி, அரச உத்தியோகம்<br>தொ.இ: B/10374 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் :பூசம் 4<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:அரசதொழில்<br>தொ.இ: G/10392 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் : பூரம் 1<br>கி.பா: 41 ¼செவ் 12 ல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:BA Reading, அரச வானொலி<br>எதிர்பார்ப்பு:தொழில் புரிபவர்<br>தொ.இ: B/10375 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம் : திருவாதிரை 2<br>கி.பா: 22 ½செவ் 2 இல்<br>உயரம்:5'6''<br>தகைமை/தொழில்:B.Sc, கணக்கு உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/10393 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## வாழ்க பல்லாண்டு

"கல்விக்கு கரம் கொடுப்போம்
அபிவிருத்திக்கு முதலிடம் கொடுப்போம்
வறுமைக்கு விடை கொடுப்போம்"
என்ற தாரக மந்திரத்தோடு செயல்படும்
வன்னி நாயகன்

**பிரபா கணேசனுக்கு**

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இன்று
பிறந்தநாளைக்
கொண்டாடும்
வன்னி நாயகன்
பல்லாண்டு வாழ
வேண்டும் என்று
வன்னி மாவட்ட
மக்களோடு கரம்
கோர்த்து நாமும்
வாழ்த்துகின்றோம்.



வன்னி மாவட்ட
ஜனநாயக மக்கள் காங்கிரஸ்
தலைவர்கள், பிரமுகர்கள்,
அமைப்பாளர்கள்,
தொண்டர்கள்,
ஆதரவாளர்கள்

(C-8831)

நாளை நமதே வெற்றியும் எமதே



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

(C-8832)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# ஒற்றையாட்சியைப் பாதுகாப்பேன் புத்தசாசனத்தைப் பாதுகாத்து போஷிப்பேன்

## அக்கிராசன உரையில் ஜனாதிபதி உறுதி




சபாநாயகர் அவர்களே,
பிரதமர் அவர்களே,
எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே,
அமைச்சர்களே,
இராஜாங்க அமைச்சர்களே,
பாராளுமன்ற பிரதிநிதிகளே,

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் தலைவராக உங்களுக்கு உரை நிகழ்த்தும் இவ்வாய்ப்பானது நவம்பர் மாதம் 16 ஆம் திகதி இந்நாட்டின் மக்கள் வழங்கிய வரலாற்றுமிக்க வெற்றியினாலேயே எனக்குக் கிடைத்துள்ளது.

அமைதியானதும் அத்துடன் நியாயமானதுமான தேர்தல் ஒன்றிற்காகத் தம்மை அர்ப்பணித்த அனைத்துப் பிரஜைகளுக்கும், நிறுவனங்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் நான் இவ்வேளையில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ் உயர்சபையில் அமர்ந்திருக்கும் நீங்கள் எக்கட்சியைச் சேர்ந்தவராகவிருப்பினும் இந்நாட்டு மக்களது நலன்கருதி சேவையாற்றுவது எம் அனைவரதும் அடிப்படைப் பொறுப்பாகும்.

**“ இலங்கையின் எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரை நேற்று ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கைப் பிரகடனத்தை சபையில் முன்வைத்து ஆற்றிய உரை (03.01.2020) ”**

நான் ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக இந்நாட்டின் இராணுவ அதிகாரியொருவராக வும், பத்து வருடங்களுக்கு அண்மித்த காலம் இந்நாட்டின் பாதுகாப்புச் செயலாளராகவும் சேவையாற்றினேன்.

நான் முனைப்பான அரசியலில் ஈடுபட்டிராவிடினும் மக்கள் சேவையாதென்பது பற்றி நான் சிறிய வயதிலிருந்து கற்றுக் கொண்டுள்ளேன்.

எனது தந்தையின் மூத்த சகோதரரான டி.எம். ராஜபக்ஷ 1936 ஆம் ஆண்டில் அரசப் பேரவையில் அம்பாந்தோட்டை தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தித் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்ததுடன், 1945 ஆம் ஆண்டில் அவர் காலமான பின்னர் அம்பாந்தோட்டை மக்கள் எனது தந்தையான டி.ஏ.ராஜபக்ஷவை அரச பேரவைக்காகத் தெரிவு செய்தனர். அதன்பின் அவர் மக்கள் வாக்கினால் இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்.

அன்று தொடக்கம் இற்றைவரைக்கும் உறுகுணை கிருவாபத்துவையின் கிராமப்புறமான மெதமுலனையை அடிப்படையாகக் கொண்ட மூன்று தலைமுறையைச் சேர்ந்த ராஜபக்ஷவினர் வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு மக்கள் பிரதிநிதிகளாகச் சேவையாற்றியுள்ளனர்.

இக்காலப் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சரவை அமைச்சர்கள், உப சபாநாயகர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமராக மட்டுமல்லாது ஜனாதிபதிகள் இருவர்களாகவும் எங்கள்மீது நம்பிக்கை வைத்த இந்நாட்டின் பொதுமக்கள் எம்மை தேர்ந்தெடுத்துள்ளனர்.

அன்று உறுகுணையின் சிங்கமாக அழைக்கப்பட்ட டி.எம்.ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு வருகை தந்த முதல் நாளிலிருந்தே குரக்கன் நிறமான சால்வையொன்றை அணிந்திருந்தார்.

அவர் கிருவாபத்துவையின் குரக்கன் செய்கை பண்ணும் விவசாயிகளையே அந்தச் சால்வையின் மூலம் அடையாளப்படுத்தினார்.

டி.எம்.ராஜபக்ஷவின்பின் எனது தந்தையான டி.ஏ.ராஜபக்ஷவும் அவரின்பின் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களும் இந்தக் குரக்கன் நிறமான சால்வையை அணிந்திருந்தனர்.

நான் அந்தச் சால்வையை அணியாதிருப்பினும் இந்நாட்டின் கஷ்டத்திற்குள்ளான மக்கள் சார்பில் என்றென்றும் தம்மை அர்ப்பணித்த குரக்கன் சால்வையினால் அடையாளப்படுத்துகின்ற அந்த ஆழமான தத்துவத்தையே நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன்.

அத்தத்துவம் ஜனாதிபதி தேர்தலுக்காக நான் சமர்ப்பித்த கொள்கைப் பிரகடனத்திலும் உள்ளடங்கியிருக்கிறது.

**சபாநாயகர் அவர்களே,**

இவ்வேளையில் நான் “சுபீட்சத்தின் நோக்கு” எனும் கொள்கைப் பிரகடனத்தை சபையில் முன்னிலைப்படுத்துகின்றேன்.

2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் இந்நாட்டு மக்கள் எனக்கு மிகத் தெளிவான தொரு மக்கள் வரத்தினை பெற்றுக் கொடுத்தனர். என்மேல் வைத்த மிகுந்த நம்பிக்கையைக் கொண்டே அவ் வரத்தினை எனக்கு வழங்கினர்.

அந்நம்பிக்கையை எவ்வகையிலும் மீறாது நாம் உறுதியளித்த அதேவாறு மக்களுக்காகச் சுபீட்சமானதொரு தேசத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு நானும் எனது அரசாங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

எனக்கு வாக்களித்த மக்களுக்கு இந்நாட்டு அரசியல் கலாசாரத்தில் பாரியதொரு மாற்றத்தைச் செய்யவே தேவையேற்பட்டு இருந்தது. குறிப்பாக இனவாதத்தை அடிப்படையாகக்கொண்ட அரசியல் ரீதியான நிகழ்ச்சி நிரலை மக்கள் நிராகரித்தனர். மேலும் அரசர்களை உருவாக்கும் வகிபாகத்தை நடித்துக் கொண்டு நாட்டின் அரசியலை வழிநடத்துவதற்கு எவருக்கும் சந்தர்ப்ப மளிக்கப்படமாட்டாது என்பதை பெரும்பான்மை மக்கள் நிரூபித்தனர்.

இந்த யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன். கடந்த காலத்தில் குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்திய அரசியலைத் தற்போதாவது கைவிட்டு மக்களிடையே பேதங்களை விதைப்பதற்குப் பதிலாக ஒன்றிணைந்து தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் ஒன்றுசேருமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

**பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புக்களை நாம் என்றும் மதிக்க வேண்டும். அப்போது தான் மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்க முடியும்.**

எமது நாட்டின் உன்னதமான அரசியல் யாப்பின்படி எனது பதவிக்காலத்தினுள் நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாப்பேன் என்றும் புத்தசாசனத்தைப் பாதுகாத்து போஷிப்பேன் என்றும் அதேபோன்று எந்தவொரு பிரஜையும் தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரத்தை எப்போதும் காப்பேன் என்றும் இதன்போது வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

சிறுவயதில் எனது தந்தையார் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது எனது ஞாபகத்திலுள்ளது. நான் பெரும்பாலும் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் கலரியில் இருந்து பாராளுமன்றச் செயற்பாடுகளைக் கண்டுகளித்துள்ளேன். கடந்தகாலத்தில் நாங்கள் கண்ட பாராளுமன்றம் மிகவும் முன்மாதிரியான இடமாக இருந்தது. இதில் மிக முக்கிய கருத்துமிக்க உரைகள் நிகழ்த்தப்பட்டன. மிகத் தர்க்கரீதியான வாத விவாதங்கள் இடம்பெற்றன.

(9ஆம் பக்கம் பார்க்க...)

பாடசாலைப் பிள்ளைகளைப் போன்று மூத்தவர்களும் அவற்றைப் பார்க்கும், செவிமடுக்கும் ஆசையுடன் பாராளுமன்றத்திற்கு வந்திருந்தனர். பாராளுமன்றத்தின் மேலாதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள உறுப்பினர்கள் எல்லா வகையிலும் முயற்சித்தனர். மக்கள் அன்று பாராளுமன்றத்தை மதித்தனர். மக்கள் பிரதிநிதிகளை மதித்தனர். எனினும் பிற்பட்ட காலங்களில் இந்த மரியாதை படிப்படியாக குறைந்து போயிற்று.

இந்தப் பாராளுமன்றம் மீண்டுமொருமுறை மக்களின் உண்மையான பிரச்சினைகளை கலந்துரையாடும், தேசியக் கொள்கைகளை விவாதிக்கும் சட்டவாக்கத்துறையின் பொறுப்பை உரியவாறு நிறைவேற்றும் முன்மாதிரியானதொரு இடமாக மாற்றப்பட வேண்டும். பாராளுமன்றத்தை மக்களின் மதிப்பை வென்றெடுக்கும் ஒரு இடமாக மாற்றிய மைக்கும் அடிப்படைப் பொறுப்பு இங்கிருக்கின்ற மக்கள் பிரதிநிதிகளிடமே தங்கியுள்ளது.

இன்று இந்நாட்டில் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலவுகிறது. சுதந்திரம் பெற்று 70 வருடங்கள் கழிந்த பின்னரும்கூட இந்நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் நாம் திருப்தியடைய முடியாது. இந்நிலைமையை மாற்றியமைக்கும் பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு. அது சார்பில் தேவையான அர்ப்பணிப்புக்களைச் செய்வதற்கு நாம் தயாராக வேண்டும்.

மக்கள் பிரதிநிதி ஒருவரின் அடிப்படைப் பொறுப்பாவது மக்களுக்குச் சேவையாற்றுவதேயாகும். எமக்குக் கிடைத்துள்ள பதவிகள் சிறப்புரிமைகள் அல்ல அவை பொறுப்புக்கள் என்பதை நாம் அனைவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நாடொன்றை முன்னேற்றுவதற்காகச் சீரான தொலைநோக்கும், திட்டங்களும் தேவைப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டின் மக்களுக்கு அறிமுகப்படுத்திய "சுபீட்சத்தின் நோக்கு" எனும் கொள்கைக் பிரகடனமானது சுமார் 4 வருடங்களுக்குக் கிட்டிய காலமாக 'வியத்மக' போன்ற தேசிய அமைப்புக்களூடாகவும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட "கமசமக பிலிசந்தரக்" நிகழ்ச்சித்திட்டத்தினூடாகவும் ஏனைய அரசியல் கட்சிகளுடன் நிகழ்த்திய விவாதங்களூடாகவும் மக்களது கருத்துக்களைப் பெற்றுக் கொண்டும் எனது நோக்கையும் அதில் சேர்த்துக் கொண்டும் தயாரித்த தேசிய வேலைத்திட்டமாகும்.

அத்திட்டத்திற்கமைய மக்களுக்குச் சுமையாக விருந்த வரிச்சுமையை தளர்த்தல், வெளிப்படைத் தன்மை மற்றும் வினைத்திறமையுடன் கூடிய உயர்ந்த நிர்வாகத் திறமுறையை ஆரம்பித்தல், வீணான அரசாங்கச் செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளல் போன்ற பல நடவடிக்கைகளைத் தற்போது நாங்கள் எடுத்துள்ளோம்.

எமது கொள்கைகளினிடையே தேசியப் பாதுகாப்புக்காக உச்சக்கட்ட முன்னுரிமை கிடைக்கின்றது.

தேசியப் பாதுகாப்புப் பொறிமுறையை மீண்டும் வலுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் நாங்கள் ஏற்கனவே எடுத்துள்ளோம். திறமை வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் பொறுப்புக்களை கையளித்துள்ளோம். தேசியப் பாதுகாப்புக்கான பொறுப்புடைய முப்படைக்கும், பொலிஸாருக்கும் இடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். தேசிய உளவுப் பிரிவு வலையமைப்பை மறுசீரமைத்து வலுப்படுத்தியுள்ளோம்.

எமது தாய்நாட்டை பயங்கரவாதத்திலிருந்தும், அடிப்படைவாதத்திலிருந்தும், பாதாளச் செயற்பாடு களிலிருந்தும், கள்வர்கள் பயத்திலிருந்தும், கப்பம் பெறுநர்களிடமிருந்தும், போதைப்பொருள் இடையூறிலிருந்தும், சாதாரண மக்கள் வாழ்க்கையை முறியடிப்பவர்களிடமிருந்தும் அத்துடன் பெண்கள் மற்றும் சிறுவர் துன்புறுத்தல்களற்ற பாதுகாப்பான நாடாக உருவாக்குவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்பேன்.

எமது அடிப்படை நோக்கமானது உற்பத்திப் பெருக்கமுள்ள ஒரு பிரஜை, மகிழ்ச்சியுடன் வாழ்கின்ற குடும்பம், ஒழுக்கம் மிக்க சமூகம் மற்றும் சுபீட்சமான ஒரு தேசத்தை உருவாக்குவ தேயாகும்.

இந்நாட்டில் வாழுகின்ற, வேலை செய்யக் கூடிய வயதிலுள்ள ஒவ்வொரு ஆரோக்கியமான பிரஜையையும், சமூகத்திற்கு உழைக்கக்கூடிய நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

வறுமையை ஒழிப்பது எமது அரசாங்கத்தின் முன்னுரிமையாகக் கருதுகின்றோம். அதற்காக நாங்கள் மக்கள் ஏழைகளாவதற்கான காரணங்களைப் புரிந்து கொண்டு அவற்றிற்குத் தீர்வுகளை வழங்க வேண்டும். தகுந்த கல்வியோ அல்லது திறமையோ இல்லாமை, பயிரிடுவதற்குக் காணிகள் இல்லாமை, சுயதொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு மூலதனம் இல்லாமை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதன் மூலம் வறுமையை ஒழிப்தற்கும் நடைமுறை சாத்தியமான அணுகுமுறையைப் பெற்றுக் கொள்ளலாம்.

# பயங்கரவாதத்திலிருந்தும் அடிப்படைவாதத்திலிருந்தும் தாய்நாட்டை பாதுகாப்பேன்

## பாராளுமன்றில் ஜனாதிபதி திட்டவட்டம்



உற்பத்திப் பெருக்கமிக்க பிரஜையாக மாற்றுவ தில் அரசு முன்னின்று செயற்பட வேண்டும். அவர்கள் அனைவரையும் இந்நாட்டின் பொருளாதாரத்தில் பங்களிக்கச் செய்வதே எமக்குத் தேவையாகிறது.

அபிவிருத்திச் செயற்பாடுகளின் நன்மைகள் நாட்டு மக்கள் அனைவருக்கும் பகிரப்படுவதில் நாங்கள் பொறுப்பாக இருக்க வேண்டும். அதே போன்று நாட்டு மக்களின் தேவைகள் உண்மையாகவே நிறைவேற்றப்படுகின்றனவா?, அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனரா? என்பதை ஆராய்வதற்காக புதிய திறமுறையொன்றையும், சுட்டிகளையும் பயன்படுத்த வேண்டும். அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக் கான மக்களின் பதிலை ஆராய்வதற்காகத் தேர்தல் வரும் வரை பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்காக நாங்கள் எடுக்கும் முயற்சிக்கு அனைவரதும் ஆதரவு எமக்குத் தேவைப்படுகிறது. கடந்த நாட்களில் நாங்கள் வியாபாரத்துறைக்காக வழங்கிய வரிச்சலுகைகளில் குறிப்பிட்ட சதவீதத்தை அவர்கள் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கமைய வரிகள் குறைக்கப்பட்ட ஒவ்வொரு பண்டத்தினதும், ஒவ்வொரு சேவையினதும் குறிப்பிட்ட விலை குறைக்கப்படுவதை

எதிர்வரும் மாதத்தில் இந்நாட்டின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் இளைஞர், யுவதிகள் ஒரு இலட்சம் பேருக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு நாம் திட்டம் வகுத்துள்ளோம். அரச துறையையும், தனியார் துறையையும் ஒன்றிணைத்துக்கொண்டு தொழிலின்மைக்காகப் நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை முன்வைப்பதற்கு எமது அரசாங்கம் தயாராகவுள்ளது.

குணநலமிக்க, சட்டத்தை மதிக்கும், ஒழுக்கப் பண்பாடுடைய சமூகத்தை உருவாக்குவோம் என்பது கடந்த தேர்தலின்போது எமது தொனிப் பொருளாக இருந்தது. மக்கள் அதற்காக எமக்கு வர மொன்றை அளித்துள்ளார்கள். எமது நாடு மிகவும் பண்டையகால வரலாற்று மிகுந்த பௌத்த தத்துவத்தைப் போன்று உலகினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல மத போதனைகளினால் போஷிக்கப்பட்ட சமூகம் வாழும் நாடாகும். எமது விழுமியங்களையும், கலாசாரங்களையும் நாம் எப்போதும் பாதுகாக்க வேண்டும்.

இலங்கையை அபிவிருத்தியடைந்ததொரு நாடாக உருவாக்குவது எமது இலக்காகும். அது இறைமையான, சுதந்திர நாடாதல் வேண்டும். அதேபோன்று அது பாதுகாப்புமிக்க அமைதியான நாடாதல் வேண்டும்.

(தொடரும்...)

## சட்டவிரோத காடழிப்பு, மணல் அகழ்வினால்
# அழிவின் விளிம்பில் உள்ள மாந்தை கிழக்கு கிராமங்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் தொடரும் மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ஆகியோரிடம் மாந்தை கிழக்கு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. பறங்கி ஆற்றில் மணல் அகழ்வு இடம்பெற்று சிறாட்டிக்குளம், நட்டாங்கண்டல் வீதி வழியாக மணல் கொண்டு செல்லப்படுகின்றது. முக்கிய நபர்களின் ஒத்துழைப்புடன் மணல் அகழ்வு நடைபெறுகின்றது. மாந்தை கிழக்கில் நிலைகொண்டுள்ள பொலிஸார் மணல் அகழ்வு தொடர்பாக பக்கச் சார்பாக நடப்பதன் காரணமாகவே மணல் அகழ்வு தொடர்ச்சியாக நடைபெறுவதாகவும் பொது அமைப்புக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. பறங்கி ஆற்றில் தொடரும் மணல் அகழ்வினால் பெரும் சூழலியல் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக மாந்தை கிழக்கில் மணல் அகழ்வும் மரங்கடத்தலும் பெருமளவில் நடைபெறுவதன் காரணமாக கிராமங்கள் அழிவுக்கு உட்படும் அபாயம் உருவாகி உள்ளது. விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த மணல் அகழ்வு, மரங் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என பொது அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன. (9-350)




## கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட
# பராமரிப்பற்ற காணி உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை


### தவிசாளர் அறிவிப்பு

(கிளிநொச்சி)

நீண்டகாலமாக பராமரிப்பு இன்றி காணப்படும் காணி உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் நீண்ட காலமாக பல காணிகள் உரிமையாளரின் பராமரிப்பு இன்றி கலாசார பிறழ்வுகள், போதைப் பொருள் பாவனை, சட்டவிரோத செயற்பாடுகள், போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகளுக்கான அசௌகரியங்கள், நுளம்பு மற்றும் விசஜந்துக்களின் பெருக்கம் என்பன அதிகமாக காணப்படுவதாக மக்களிடம் இருந்து தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. எனவே காணி உரிமையாளர்கள் உடனடியாகச் செயற்பட்டு தங்களது காணிகளை துப்புரவு செய்யுமாறு கேட் டுக்கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு துப் புரவு செய்யத் தவறும் பட்சத்தில் பொது மக்கள் நன்மை கருதி சபை நிதியில் குறித்த காணிகள் துப்புரவு செய்யப்படு வதுடன் அதனால் ஏற்படும் செலவுகள் உட் பட குறித்த காணியின் இன்றைய சந்தைப்பெறுமதியின் 2% வீதம் உரிமையாளர் / பராமரிப்பாளரிடம் இருந்து சட்டபூர்வமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (9)

# வன்னி மாவட்ட புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்



(நெளுக்குளம்)

வன்னி மாவட்டத்திற்கு புதிய பிரதி பொலிஸ்மா அதிபர் நேற்று தனது அவலகத்தில் கடமை களைப்பொறுப்பேற்றுக் கொண்டார்.

வன்னி மாவட்டத்தின் புதிய பொலிஸ்மா அதிபராக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய றொகான் ஜே சில்வா கடந்த மாதம் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் சில நாட்களிலேயே அவர் இடமாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் புதிய பிரதி பொலிஸ்மா அதிபராக தம்மிக்க பிரியந்த நியமிக்கப்பட்டுள்ளதுடன் நேற்று உத்தியோகபூர்வமாக அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். பின்னர் வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார் . (9-299)

## முல்லை.நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் வைத்தியசாலையில் பணியாற்றிய நிரந்தர வைத்தியர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் இந் நிலையில் நிரந்தர வைத்தியரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ்விடயம் ஆராயப்பட்ட போது நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு இதுவரை வருவதற்கு வைத்தியர்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை. விரைவில் நிரந்தர வைத்தியரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

தற்போது நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் தற்காலிகமாக வைத்தியர் ஒருவர் பணியில் உள்ளார் எனவும் வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

நட்டாங்கண்டல் வைத்தியசாலை மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வாழ்கின்ற குடும்பங்களின் வைத்திய வசதிக்காக இயங்குகின்ற ஒரேயொரு வைத்தியசாலையாகக் காணப்படும் நிலையில் வைத்தியசாலையின் வளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது இப்பிரதேச மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். (9-350)

## கிளிநொச்சி மாவட்டத்துக்கான விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தரை நியமிக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திற்கான விவசாய ஏற்றுமதி திணைக்களத்தின் உத்தியோகத்தருக்கான வெற்றிடம் நிரப்பப்படாமையினால் விவசாயிகளும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த திணைக்களத்தில் விரிவாக்க உத்தியோகத்தராக பணியாற்றியவர் அண்மையில் இடமாற்றம் பெற்று சென்றுள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திற்கான வெற்றிடம் இதுவரை நிரப்பப்படாது காணப்படுகின்றது.

இவ்வாறு ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்திற்கான விரிவாக்க உத்தியோகத்தர் நியமிக்கப்படாமையினால் ஏற்றுமதி விவசாய பயிர்ச்செய்கைகள் தொடர்பான ஆலோசனை களையும் அறிவுரைகளையும் பெற்றுக் கொள் வதில் விவசாயிகளும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.(9-315)

## க.பொ.த.உயர்தர பெறுபேறுகள்

### கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம்

**உயிரியல் பிரிவு-பழைய பாடத்திட்டம்**

இ.கேமகிரி-2ஏபி, லோ.புவிசன்-பிசிஎஸ்.

**கணிதப் பிரிவு**

அ.றஜலக்சன்-பிசிஎஸ், யோ.சகிராஜ்-2பிசி.

**உயிரியல் புதிய பாடத்திட்டம்**

சு.லஜீபன்-2பிஎஸ்.

**கணிதப் பிரிவு புதிய பாடத்திட்டம்**

சி.பிரதாப்-பிசிஎஸ், சி.சர்மிலன்-சி2எஸ்.

**கலைப்பிரிவு-புதியபாடத்திட்டம்**

க.கம்சிகா-ஏ2பி, ச.நிறோஜினி-2ஏபி, ந.மதுசா-ஏ2பி.

**கலைப்பிரிவு பழைய பாடத்திட்டம்**

விஜிதரன்-ஏபிசி, துவாரகா-ஏபிசி, நிலாவினி-ஏ2சி

**வணிகப்பிரிவு-புதிய பாடத்திட்டம்**

பா.கிருபாளினி-3ஏ, மொ.பிரதிப்-3ஏ.

## வவுனியாவை சுத்தப்படுத்தும் மாபெரும் சிரமதானம்



(நெளுக்குளம்)

"தாய்நாட்டை சுத்தப்படுத்துவோம்" என்ற ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் நேற்று வவுனியாவில் மாபெரும் சிரமதானம் இடம்பெற்றது. வவுனியா வர்த்தக் சங்கம், வவுனியா பொலிஸார் மற்றும் முச்சக்கரவண்டி சாரதிகள் இணைந்து மேற்கொண்ட மாபெரும் சிரமதானப் பணி ஒன்று வன்னி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவின் வழிகாட்டலில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகரப் பகுதியில் இருந்து ஆரம்பமாகிய சிரமதானப் பணி பொதுவைத்தியசாலை, பேருந்து நிலையம், முதன்மை வீதிகள் போன்ற பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அழிக்கப்பட்டிருந்தன.

குறித்த செயற்றிட்டம் வவுனியாவை அழகுபடுத்தும் நோக்குடனும் டெங்கினை முற்றாக ஒழிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் பெருமளவான பொலிஸ் உத்தியோகத்தர்கள், வர்த்தக பிரமுகர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் சிரமதான பணியுடன் கூடிய விழிப்புணர்வும் இடம் பெற்றிருந்தது. இன்றிலிருந்து விசேட குழு அமைக்கப்பட்டு நகரை அசுத்தப்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.(9-299)

# வீதிகள் புனரமைப்பு



(அக்கராயன்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள வண்ணக்கேணி பிரதான வீதி மற்றும் குருடிகாடு இணைப்பு வீதிகளின் புனரமைப்புப் பணிகள் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மிகவும் நீண்டகாலமாக புனரமைக்கப்படாது காணப்பட்ட குறித்த வீதிகளை புனரமைத்துத் தருமாறு கிராம அமைப்புக்கள், மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்த நிலையில் தற்போது இந்த வீதிகள் புனரமைக்கப்படுகின்றன.

வண்ணக்கேணி பிரதான வீதியானது வடக்கு மாகாண விவசாய அமைச்சினுடைய சமூக வலுவூட்டல் வேலைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 5 மில்லியன் ரூபா நிதியில் புனரமைக்கப்படுகிறது.

வேம்பொடுகேணி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள குருடிகாடு இணைப்பு வீதியானது வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சமூக பாதுகாப்பு நிதியான 3 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்படுகிறது. குறித்த வீதி புனரமைப்புப் பணிகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர், உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர். (9-350)

## சிறுவர் தின நிகழ்வு



(நெளுக்குளம்)

காத்தார் சின்னகுளம் சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில் சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது. கழகத்தின் தலைவர் புஸ்பராசா தனுசியாவின் தலைமையில் கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுவின் தலைவர் கி.டினேசின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா உதவி பிரதேச செயலாளர் எஸ்.பிரியதர்சினி கலந்து கொண்டார். நிகழ்வில் விசேடமாக சிறுவர்களின் நடன நிகழ்வு களுடன் விழிப்புணர்வு நாடகங்கள் இடம்பெற்றன.

இதன்போது கண்ணகி அறக்கட்டளையின் நிறுவனர் அகிலனின் நிதிப் பங்களிப்பில் வறுமை நிலையிலுள்ள 80 பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர் களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (9-299)


## பெண் ஊழியர்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்போம் - வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி




(நெளுக்குளம்)

வவுனியா வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் பெண் ஊழியர்களின் உரிமைகளை பாதுக்காக்க கோரி விழிப் புணர்வு பேரணி ஒன்று வவுனியாவில் நேற்று முன் னெடுக்கப்பட்டது. வவுனியா மாவட்ட உள்ளூராட்சி பெண்கள் ஒன்றியம், பொதுஅமைப்புகளின் ஏற்பாட்டில் குறித்த பேரணி இடம்பெற்றது.

வவுனியா பழைய பேருந்து நிலை யத்தின் முன்பாக ஆரம்பமாகிய பேரணி கண்டிவீதி வழியாக, வவுனியா நகரசபை வளாகத்திற்கு சென்று அங்கு பிரதி முதல்வர் சு.குமாரசாமியிடம் மகஜர் கையளிக்கப்பட்டிருந் ததுடன், அங்கிருந்து வவுனியா மாவட்ட செயலகத்திற்கு சென்று அரச அதிபர் எம்,கனீபாவிடமும் மகஜர் கையளிக்கப் பட்டது. பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஆணுக்கு



பெண் சமத்துவம் வழங்கப்படவேண்டும், அடிக்காதே அடிக்காதே பெண்ணை அடிக்காதே, வேண்டாம் வேண் டாம் வன்முறை வேண்டாம் போன்ற கோசங்களை எழுப் பியிருந்தனர். (9-299)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(மன்னார்)

மன்னார் நகர சபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் நலன்கருதி அவர் களுக்கான கற்றல் உபகரணங்களை பொறியியலாளர் எஸ்.விமல் நேற்று முன்தினம் மன்னார் விபாழக்கிழமை நகர மண்டபத்தில் வைத்து வழங்கி வைத்தார். மன்னார் நகர சபையின் தலைவரின் வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப் பட்டன. குறித்த நிகழ்வில் மன்னார் நகர சபையின் தலைவர் ஞா. அன்ரனி டேவிட்சன், நகர சபை யின் செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-285)

## சான்றுப்பொருளாக நிறுத்தி வைக்கப்பட்ட வாகனத்தை சேதப்படுத்தியவர் கைது

(மன்னார்)

மன்னார் நீதவான் நீதிமன்ற முன்றலில் வழக்கு ஒன்றின் தடயப்பொருளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தை டிப்பர் ரால் மோதி சேதப்படுத்தியதாக சாரதி ஒருவர் கைது செய்யப் பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், மன்னார் மாவட்ட நீதவான் நீதி மன்றுக்கு முன்பாக வழக்கு ஒன்றுடன் தொடர்புடைய சான்றுப் பொருளான வாகனம் ஒன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. சம்பவ தினத்தன்று டிப்பர் ஒன்று அப்பகுதி ஊடாக கடந்து செல்ல முற்பட்டபோது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் மீது மோதுண்டதால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் சேத மடைந்தது. இதனைத் தொடர்ந்து நீதிமன்ற பதிவாளர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டடைத் தொடர்ந்து டிப்பர் வாகன சாரதி கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா முன்னிலையில் சந்தேக நபர் ஆஜர்படுத்தப்பட்டபோது ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் செல்ல நீதவான் உத்தரவிட்டதுடன் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (9-285)

## பனிப்பூச்சியின் தாக்கத்தால் கமுகு செய்கைகளில் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கமுகு செய்கைகளில் பனிப் பூச்சியின் தாக்கம் அடையாளம் காண ப்பட்டுள்ளது.

அதாவது புன்னை நீராவி, திருவையாறு, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் இவ்வாறான நோய்த்தாக்கம் கண்டறியப்பட்டு ள்ளது. இவ்வாறான நோய்த் தாக்கம் தொடர்பில் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சுத்தமான தண்ணீரால் நோய்த்தாக்கத்திற்கு உள்ளான கமுகுகளை கழுவு வதன் மூலமும் இரசாயனப் பாவனை மூலமும் இதனை கட் டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான ஆலோசனை களை பெற்றுக் கொள்வதற்கு அத ற்கான உத்தியோகத்தர் இல் லா ததால் பாரிய பிரச்சினையாக வுள்ளதாக கமுகு செய்கையா ளர்கள்தெரிவித்துள்ளனர் (9-315)

## முல்லை.மாவட்டத்துக்கான மீன்பிடி சமாசத்தை உருவாக்க நடவடிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நன்னீர் மீன்பிடிச் சங் கங்களை ஒன்றிணைத்து மாவ ட்ட நன்னீர் மீன்பிடிச் சங்கங்க ளின் சமாசம் ஒன்றினை அமைப்பதற் கான முயற்சிகளை முல்லைத்தீவு உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இச்சமாசம் மாங்குளத்தில் இயங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.


முல்லைத்தீவு மாவட்டத்திலே நன்னீர் மீன்பிடி முக்கிய தொழி லாகக் காணப்படுகின்றது. பல குடும்பங்களின் வாழ்வாதாரங் களைத் தீர்மானிக்கும் சக்தியாக காணப்படும் நிலையில் நன்னீர் மீன்பிடித் துறையினை அபிவிரு த்தி செய்யும் நோக்கில் குறித்த சமாசம் மாங்குளத்தில் செயற்ப டும் எனவும் நன்னீர் மீன்பிடிச் சங்கங்களை ஒன்றிணைப்பதன் மூலம் எதிர்காலத்தில் நன்னீர் மீன்பிடியாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் காணப்படுவதற்கான வாய்ப்பு உருவாகி உள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிறிய, பெரிய குளங்களில் மீன் குஞ்சுகளை விடுவதற்கான ஏற்பாடுகளை அதி காரிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் சில குளங்களுக்கு மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ள போதி லும் அனைத்துக் குளங்களுக்கும் மீன் குஞ்சுகளை விடுமாறு நன்னீர் மீன்பிடிச் சங்கங்கள் வலியுறுத்தி உள்ளன. (9-350)

## அரச அலுவலகங்களில் மரக்கன்றுகள் நாட்டல்

(குருமன்காடு)

ஜனாதிபதியின் பசுமைத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் வடக்கு மாகாணத்திலுள்ள அரச அலுவலகங்கள் , திணைக்களங்களில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.





அந்த வகையில் புதுவருட தினத்தில் வவுனியா மாவட்ட செயலகம், வவுனியா பிரதேச செயலகம், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலகம், வவுனியா வடக்கு பிரதேச செயலகம் மற்றும் குருமன்காடு காளி கோவில் வீதி என்பவற்றில் இம் மரநடுகை இடம்பெற்றது.



மேலும் முல்லைத்தீவு மாவட்ட சித்த மருத்துவ மனையில் மாவட்ட ஆயுள் வேத ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் ஆர்.மணி வர்ணன் தலைமையில் வைத் தியசாலை வளாக த்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. (9-250)

## மூன்றுமுறிப்பு கிராமத்திலுள்ள அரிசி ஆலையை இயக்குமாறு மாதர் சங்கத்தினர் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழ க்கு மூன்றுமுறிப்புக் கிராமத் தில் அமைக்கப்பட்டுள்ள அரிசி ஆலையினை இயக்குவதற்கு மாந்தை பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மூன்றுமுறிப்பு மாதர் சங் கம் வேண்டுகோள் விடுத் துள்ளது.

2014ஆம் ஆண்டு பதினா ன்கு இலட்சம் ரூபா செலவில் மாந்தை கிழக்கு பிரதேச செய லகத்தினால் குறித்த அரிசி ஆலை அமைக்கப்பட்ட போதி லும் பிரதேச செயலகத்தினால் அரிசி ஆலை இயங்குவதற் குரிய அளவிலான மின்சார வசதிகள் ஏற்படுத்தப்படாததன் காரணமாக இதுவரை அரிசி ஆலை இயங்காமலே உள் ளது.



மூன்றுமுறிப்புக் கிராம த்தில் தற்போது அறுபது குடும்பங்கள் வாழ்ந்து வரு கின்றன.

இக் கிராமத்தில் இர ண்டு குளங்கள் காண ப்படுகின்றன. மூன்று முறி ப்புக்குளம், தேவிகுளம் ஆகிய குளங்களின் கீழ் இருநூறு ஏக்கர் வரை யான நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப் படுகின்றது.


குறித்த நெல்லினை அரிசியாக மாற்றுவதற்கு என அமைக்கப்பட்ட அரிசி ஆலை இயங்காததன் காரணமாக தூர இடங்களுக்கு நெல்லி னைக் கொண்டு சென்று அரி சியாக மாற்றுவதாகவும் இத னால் குறித்த ஆலையினை இயக்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு மாதர் சங்கம் கோரிக்கை விடுத்துள் ளது. (9-350)



# பாரதம்

## குடியரசு தின விழா

# மேற்குவங்கம், கேரள மாநிலத்தின் அலங்கார ஊர்திகளுக்கு அனுமதி மறுப்பு



(டில்லி)

குடியரசு தின விழாவில் மேற்கு வங்க மாநிலத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதை தொடர்ந்து தற்போது கேரள மாநிலத்திற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

டில்லியில் நடைபெற இருக்கும் குடியரசு தின விழாவில் மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்கள் சார்பில் 32 அலங்கார ஊர்திகளுக்கு அனுமதி கேட்டு மத்திய அரசிடம் விண்ணப்பித்திருந்தன. அதுபோல மத்திய அமைச்சர்களும் 24 வகையான அலங்கார ஊர்திகளுக்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்திருந்தனர்.

இதில் 16 மாநில அலங்கார ஊர்திகளுக்கும் மத்திய அமைச்சர்கள் சார்பில் 6 ஊர்திகளுக்கும் என மொத்தமாக 22 அலங்கார ஊர்திகளுக்கு மத்திய அரசு சார்பில் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

இதில் மேற்கு வங்காளம் மற்றும் மராட்டியத்தை சேர்ந்த அலங்கார ஊர்திகளுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. இதற்கு திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர், மத்திய அரசு திட்டமிட்டு மேற்கு வங்காள அலங்கார ஊர்தியை புறக்கணிக்கிறது என குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேபோல் மராட்டியத்திலும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்த நிலையிலும் கேரள மாநிலத்தின் அலங்கார ஊர்திக்கும் தற்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ஆஸியை அச்சுறுத்தும் காட்டுத் தீ 7 நாட்களுக்கு அவசரநிலை பிரகடனம்

(சிட்னி)



அவுஸ்திரேலியாவில் வேகமாகப் பரவி வரும் காட்டுத் தீ காரணமாக சில இடங்களில் அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தின் தென் கடற்கரைப் பகுதியில் காட்டுத் தீயின் தீவிரம் காரணமாக வெப்பநிலை அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக குறித்த பகுதியில் உள்ள மக்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் பல்வேறு மாகாணங்களில் காட்டுத் தீ பரவி வருகிறது. காட்டுத் தீ காரணமாக இதுவரை ஆயிரத்து 300 வீடுகள் இரையாகியுள்ளன.

சுமார் 5.5 மில்லியன் ஏக்கர் நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. கடும் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருவதால் நாட்டின் பல இடங்களில் வரட்சி நிலவி வருகிறது.

அத்துடன், அவுஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளதுடன், 12 பேர் காணாமல் போயுள்ளனர்.

மேலும் இந்த வாரத்தில் மாத்திரம் சுமார் 200 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் உள்ள தென் கடற்கரைப் பகுதிகளில் காட்டுத் தீ தீவிரமாகி வருவதால் வெப்பம் அதிமாகும் என்பதால் அப்பகுதியில் உள்ள மக்களை வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் 7 நாட்களுக்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து காட்டுத் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் முயற்சியில் தீயணைப்பு வீரர்கள் கடுமையாகப் போராடி வருகின்றனர்.

இந்த நிலையில் இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவுஸ்திரேலிய பிரதமர், 'காட்டுத் தீயை அணைக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. காட்டுத் தீயை அணைக்கப் போராடுபவர்கள் மீது நம்பிக்கை வைப்பதே சிறந்த வழி' எனத் தெரிவித்தார். (ஜ-2)

## அமெரிக்கா - ஈரான் மோதல்

# ஈராக்கை விட்டு அமெரிக்கர்களை உடனடியாக வெளியேற உத்தரவு

(பக்தாத்)

ஈராக்கில் ஈரான் இராணுவ தளபதி கொல்லப்பட்டதால் பதற்றம் நிலவி வருகிறது. இதனால் ஈராக்கில் உள்ள அமெரிக்கர்களை வெளியேறும்படி அமெரிக்கத் தூதரகம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்கா- ஈரான் இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ளது. கடந்த வாரம் ஈராக்கில் உள்ள ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பின் தளங்கள் மீது அமெரிக்கா உக்கிரமான தாக்குதலை நடத்தியது.


இதனைக் கண்டித்து போராட்டம் நடத்திய ஹிஸ்புல்லா ஆதரவாளர்கள், பக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை அடித்து நொறுக்கி சூறையாடினர். (ஜ-7)

# ஈராக்கில் அமெரிக்கா

# ஈரான் இராணுவத்

## அமெரிக்கக் கொடியை டுவி






**(பக்தாத்)**

**ஈராக்கில் உள்ள விமான நிலையத்தில் ரொக்கெட் தாக்குதலில் ஈரான் நாட்டின் முக்கிய தளபதி கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந் ஜனாதிபதி ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் கொடியை பதிவிட்டுள்ளார்.**

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமெரிக்கத் தூதரகம் ஹிஸ்புல்லா ஆதரவாளர்களால் சூறையாடப்பட்டது. இதற்கு ஈரான் தான் பொறுப்பேற்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். அத்துடன் இதற்கு மிகப் பெரிய விலை கொடுக்க வேண்டும் என்றும் எச்சரித்திருந்தார்.

இந்நிலையில், ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில், அமெரிக்கா ரொக்கெட் குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தியது. இதில், ஈரானிய புரட்சி பாதுகாப்பு படையின் குத்ஸ் படைப்பிரிவு தளபதி

# சூடானில் இராணுவ சரக் நான்கு குழந்தைகள் உட்

(கார்டூம்)

சூடானில் நிவாரணப் பொருட்களை வழங்கச் சென்ற இராணுவ சரக்கு விமானமொன்று விபத்துக்குள்ளானதில் நான்கு குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்தனர்.

எல் ஜெனீனாவிலிருந்து புறப்பட்ட ஒரு 'அன்டோனோவ் 12' இராணுவ விமானம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு விபத்துக்குள்ளானது.

கொடிய பழங்குடியினரின் போரால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு உதவி வழங்கிய பின்னர், மாநில தலைநகர் எல் ஜெனீனாவில் உள்ள விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட நிமிடங்களில் இந்த விமானம் விபத்துக்குள்ளான

இதன்போது இந்த விமானத்தில் பயணித்த ஏழு கொண்ட குழு, மூன்று நீதிபதிகள் மற்றும் நா பொதுமக்கள் உட்பட எட்டு பொதுமக்கள் கொ பட்டனர்.

சூடானின் பெரும்பாலான இராணுவ மற் சிவிலியன் கடற்படைகள் பழைய சோவியத் தயாரிக்கப்பட்ட விமானங்களைக் கொண் கின்றன.

அண்மைய ஆண்டுகளில் நாடு தொடர்ச்சி விபத்துக்களை சந்தித்துள்ளது.

இந்த விபத்துகளுக்கு தொழில்நுட்ப சிக்க மற்றும் மோசமான வானிலை ஆகியவற்றை ணுவம் அடிக்கடி குற்றம் சாட்டுகிறது.

இது இந்த வாரத் தொட்க்கத்தில் கொடிய பழ

# பள்ளத்தில் பாய்ந்தது அறுவர் பலி, 13 பேர்

(காஷ்மீர்)


ஜம்மு - காஷ்மீரின் ரஜோரி மாவட்டத்தில் பேருந்தொன்று விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து ரஜோரி மாவட்டத்தில்

# கா ரொக்கெட் தாக்குதல்

# த் தளபதி உயிரிழப்பு

## டுவிட்டரில் பதிவிட்ட ட்ரம்ப்




த்தில் நடத்தப்பட்ட
முக்கிய படைப்பிரிவின்
தொர்ந்து அமெரிக்க
கத்தில் அமெரிக்கக்

டும்
கர்
ான
கட்
து.
ப்பு
பதி

காசிம் சோலிமானி, ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர் குழுவின் முக்கிய கமாண்டர் அபு மகாதி உள்ளிட்ட 7 பேர் கொல்லப்பட்டனர்.

ஈரான் இராணுவ தளபதி கொல்லப்பட்டதை அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் உறுதி செய்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவின்பேரில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கூறியுள்ளது.

ஈராக்கில் தாக்குதல் நடத்திய பின் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், தனது டுவிட்டர் பக்கத்தில், அமெரிக்கக் கொடியை பதிவிட்டுள்ளார். வேறு எந்தத் தக்வலையும் அவர் தெரிவிக்கவில்லை.

ஈராக்கில் அமெரிக்க தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோரை தாக்க காசிம் சோலிமானி திட்டமிட்டிருந்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. அமெரிக்கர்களை தாக்க திட்டமிட்டதால் காசிம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவித்தது. (ஜ-2)

# இந்தோனேஷியாவில் தொடரும் கனமழை பலி எண்ணிக்கை 45 ஆக அதிகரிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் புத்தாண்டில் இருந்து தொடர்ந்து கனமழை பெய்து வரும் நிலையில், மழை தொடர்பான விபத்துக்களில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 45 ஆக உயர்ந்துள்ளது.

இந்தோனேஷியாவில் பருவமழை தீவிரமடைந்து, பரவலாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக தாழ்வான பகுதிகள் தண்ணீரில் தத்தளிக்கின்றன. பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு ஏற்பட்டு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையில், புத்தாண்டுக்குப் பிறகு ஜகார்த்தா மற்றும் அதனை ஒட்டியுள்ள பிராந்தியங்களில் பெய்து வரும் இடைவிடாத மழை காரணமாக, கடும் வெள்ளப்பெருக்குடன் ஆங்காங்கே நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.




நேற்று முன்தினம் காலை நிலவரப்படி, மழை தொடர்பான விபத்துக்களில் சிக்கி 23 பேர் பலியாகி இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. மேலும் பலரைக் காணவில்லை. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், பலி எண்ணிக்கை இன்று 45 ஆக உயர்ந்துள்ளதாக தேசிய பேரிடர் மேலாண்மை முகமை தெரிவித்துள்ளது.

தொடர் மழையால் ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ளன. வீடுகளை இழந்த மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு, முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் கரைகளில் உடைப்பு ஏற்பட்டு குடியிருப்புகளில் வெள்ளம் புகுந்துள்ளது. மீட்புக்குழுவினர் கூட செல்ல முடியாத அளவிற்கு பல்வேறு பகுதிகளுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# ஆஸியில் தீயணைப்பு வீரர் உயிரிழப்பு மகனுக்கு பதக்கம் அணித்து கௌரவிப்பு






(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் காட்டுத் தீயை கட்டுப்படுத்த போராடிய தீயணைப்பு வீரர் ஒருவர் உயிரிழந்ததையடுத்து, அவரது 18 மாதம் நிரம்பிய மகனுக்கு தந்தையின் துணிச்சலுக்காக பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஜெஃப்ரி கிட்டன் என்ற 32 வயது அவுஸ்திரேலியாவின் தீயணைப்புப் படை வீரர் ஒருவர் கடந்த 19 ஆம் திகதி காட்டுத் தீயை அணைப்பதற்காக போராடியபோது மரம் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்த நிலையில் கிட்டனின் உயிர்த் தியாகத்தை கௌரவப்படுத்தும் வகையில், அவரது இறுதி நிகழ்வில் கிட்டனின் ஒன்றரை வயது மகன் ஹார்வே கிட்டனுக்கு உயரிய கௌரவ பதக்கம் அணிவித்து அவுஸ்திரேலிய தீயணைப்பு பிரிவினர் பெருமைப்படுத்தினர்.

தனது தந்தையின் இழப்பை அறியாத, ஹார்வே கிட்டன் தீயணைப்புத் துறை தலைமை அதிகாரியிடமிருந்து பதக்கத்தைப் பெற்ற காட்சி இறுதிச் சடங்கில் இருந்த அனைவரையும் கண்கலங்கச் செய்தது. இச்சடங்கில் நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் பங்கேற்றனர்.

அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத் தீக்கு இதுவரை 18 பேர் பலியாகி உள்ள நிலையில் 12 பேர் காணாமல் போயும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)


# சரக்கு விமானம் விபத்து உட்பட 18 பேர் உயிரிழப்பு

து புறப்பட்ட ஐந்து
ந்துக்குள்ளானது.
பயணித்த ஏழு பேர்
மற்றும் நான்கு
மக்கள் கொல்லப்

ராணுவ மற்றும்
சோவியத் மூலம்
க் கொண்டிருக்

டு தொடர்ச்சியான

ற்நுட்ப சிக்கல்கள்
ஆகியவற்றை இரா
து.
கொடிய பழங்குடி



மோதல்களால் குறைந்தது 48 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 241 பேர் காயமடைந்துள்ளதாக சூடானின் ரெட் கிரசண்ட் தெரிவித்துள்ளது. (ஜ-2)

# ந்து பேருந்து; பர் படுகாயம்

பேர்
தில்

நேற்று முன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்றது. குறித்த பேருந்தானது, வேகக் கட்டுப் பாட்டை இழந்து அருகில் உள்ள பள் ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளா னது.

இதில் அறுவர் உயிரிழந்துள்ளதுடன், 13 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-2)

# ஈரான் இராணுவத் தளபதி கொலை கச்சாய் எண்ணெய் விலை அதிகரிப்பு

(ஹொங்கொங்)

ஈரான் நாட்டின் இராணுவ தளபதியை கொன்றுவிட்டதாக அமெரிக்கா அறிவித்ததைத் தொடர்ந்து, சர்வதேச சந்தையில் கச்சாய் எண்ணெய் விலை 4 சதவீதம் அளவுக்கு உயர்ந்தது.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்கா நடத்திய ரொக்கெட் தாக்குதலில், ஈரான் நாட்டின் இராணுவத் தளபதி மற்றும் ஈரான் ஆதரவு கிளர்ச்சிக் குழுவின் முக்கிய தளபதி ஆகியோர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்கா-ஈரான் இடையே பதற்றமான சூழல் நிலவுகிறது.

எண்ணெய் வளம் மிக்க ஈரான் நாட்டின் இராணுவ தளபதியை கொன்றுவிட்டதாக அமெரிக்கா கூறியதைத் தொடர்ந்து, சர்வதேச சந்தையில் கச்சாய் எண்ணெய் விலை 4 சதவீதம் அளவுக்கு உயர்ந்தது. 63.84 டொலர்களாக இருந்த ஒரு பீப்பாய் பிரெண்ட் கச்சாய் எண்ணெய் 69.16 டொலர்களாக அதிகரித்தது.

மத்திய கிழக்கு பகுதியில் மோதல் உருவாகும் என முதலீட்டாளர்கள் அச்சமடைந்ததே இந்த விலை உயர்வுக்குக் காரணம் ஆகும். (ஜ-2)

# வெளிநாடு செல்லத்தடைப்பட்டியலில் சி.ஐ.டி.யின் இன்டர்போல் பிரிவின் பொறுப்பாளரும் உள்ளடக்கம்!

(கொழும்பு)

**இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸாரின் தகவல் பாதுகாப்பு அதிகாரியாக (Data Protection Officer) இலங்கையில் செயற்பட்ட சி.ஐ.டியின் பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்ஜித் வெதசிங்கவுக்கும் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டது.**


இந் நிலையில் இலங்கையிலுள்ள இன்டர்போல் கிளையின் பொறுப்பாளராக செயற்பட்ட அவரது பணியின் தன்மையின் அடிப்படையில் அவருக்கு எதிராக அவ்வாறான தடைகளை பிறப்பிப்பது பொருத்தமானதல்ல என பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந் நிலையில் சி.ஐ.டியின் 704 பேருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணம் தொடர்பிலான தடைகள் தனக்கெதிராகவும் முன்வைக்கப்பட்டுள்ளமை ஊடாக தமது உரிமை மீறப்படுவதாக கூறி பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்ஜித் வெதசிங்க, மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடொன்றினையும் பதிவு செய்தார்.

இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து, இலங்கையிலுள்ள இன்டர்போல் பொலிஸ் பிரிவின் பொறுப்பாளராகவும் சி.ஐ.டி எனப்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராகவும் செயற்பட்டு வந்த பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்ஜித் வெதசிங்க, பொலிஸ் தலைமையகத்தின் நலன்புரிப் பிரிவின் பணிப்பாளராக இடமாற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வு





(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் கடந்த திங்கட்கிழமை மட்டுவில் கமலாசனி வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, கௌரவ விருந்தினர்களாக மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் ஜ.தேவராஜன், கிளிநொச்சி சாமிப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் செ.ஶ்ரீஸ்கந்தராசா, சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் திருமதி கிரிஜா, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-114)

# இந்திய புலமைப்பரிசிலுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(கொழும்பு)

இந்திய அரசால் வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டங்களான நேரு ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டம் மற்றும் ராஜீவ் காந்தி புலமைப் பரிசில் திட்டம் ஆகியவற்றுக்கான விண்ணப்ப இறுதித்திகதி நீடிக்கப்பட்டது.

இந்திய அரசால் வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டங்களான நேரு ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் சகல பட்டப்படிப்பு கற்கை நெறிகளும் (மருத்துவம் / துணை மருத்துவம், ஆடை வடிவமைப்பு கற்கைநெறி தவிர்ந்தவை) பொறியியல், விஞ்ஞானம், வியாபாரம், பொருளாதாரம், வர்த்தகம், மானுடவியல், கலை மற்றும் ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் B.E அல்லது B.Tech பட்டங்களுக்கு வழிசமைக்கும் தகவல் தொழில்நுட்பத் துறைகளிலான பட்டப்படிப்புக் கற்கைநெறிகள் ஆகியவற்றுக்காக விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி நாளை மறுதினம் 6 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

முன்னர் அறிவிக்கப்பட்ட இறுதித் திகதியான 2019 டிசெம்பர் 16 ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்க தவறிய மாணவர்கள் புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கும் இறுதித் திகதிக்குள் விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்கள் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சின் www.mohe.gov.lk இணையத்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தக் கற்கை நெறிகளுக்காக விண்ணப்பப் படிவங்களை உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சில் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி நாளை மறுதினம் 6 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

இந்தக் கற்கை நெறிகளுக்கான தகைமை மற்றும் தெரிவு செய்தல் நடைமுறை தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு அல்லது கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றை அணுக முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## துயர மூட்டைகள்

நம்மைப்போல் ஒரு ஆசாமி! அவன் நம்மைப் போலவே கற்பனை செய்தான். அதாவது... "நாம்தான் இந்த உலகத்தில் மிகவும் கஷ்டப்படுகிறோம். மற்றவர்கள் எல்லாம் சந்தோசமாக இருக்கிறார்கள்!" என்று.

அவன் ஒரு நாள் கடவுளை வேண்டிக் கொண்டான். "சுவாமி! இந்த உலகத்தில் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்... ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கஷ்டம் இருக்கலாம். ஒத்துக்கொள்கிறேன்... இருந்தாலும் எனக்கு அது கொஞ்சம் அதிகமாக இருப்பது போல் தெரிகிறது! அதனால் நீங்கள் எனக்காக ஒரு சின்ன உதவி செய்தால் போதும். அது வந்து... வேறு ஒன்றுமில்லை... என்னிடம் இருக்கும் துயரங்களை இன்னொருவர் யாரிடமாவது கொடுத்துவிடுங்கள்... அவரிடம் இருக்கும் துயரங்களை என்னிடம் மாற்றிக் கொடுத்து விடுங்கள். ஒரு Mutual Transfer அவ்வளவுதான்! அப்படிச் செய்தால் போதும்! அப்படி வேண்டிக் கொண்டான்.

அன்றைக்கு இரவே அவன் ஒரு கனவு கண்டான். வானத்திலே இருந்து ஒரு குரல் கேட்டது. அது என்ன சொல்லியது தெரியுமா?

"மக்களே! எல்லோரும் அவரவர் கஷ்டங்களை ஒரு பையில் போட்டு எடுத்துக் கொள்ளுங்கள்! அப்படி எடுத்துக் கொண்டு நேராக இந்த ஊர் எல்லையில் இருக்கும் கோயிலுக்கு வந்து சேருங்கள்!" என்றது அந்தக் குரல்.

ஆகா! கடவுள் நம் பிரார்த்தனைக்கு செவி சாய்த்து விட்டார் என்று சந்தோசப்பட்டான் இவன்.

உடனே என்ன செய்தான்... தன்னிடம் இருந்த கஷ்டங்களையெல்லாம் ஒரு சாக்குப் பையிலே போட்டு எடுத்துக் கொண்டான். வீட்டை விட்டு வெளியே வந்தான்... தெருவில் இறங்கி நடந்தான். அங்கே பார்த்தால்... ஏகப்பட்டோர் ஆளுக்கு ஒரு பையை தூக்கிக் கொண்டு கோயிலுக்குப் போய்க்கொண்டு இருந்தார்கள். சில பேர் மூட்டையாகக் கட்டித் தலையிலே சுமந்து கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள்...

இவன் பார்த்தான்... இவனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஏன் என்றால்... எல்லோரும் வைத்திருக்கும் பை இவன் பையை விடப் பெரிதாக இருந்தது. இவன் பைதான் இருப்திலேயே கொஞ்சம் சின்னதாகத் தெரிந்தது. இப்போது அவன் மறுபடியும் சாமியை வேண்டினான்.

"கடவுளே... இப்போது சூழ்நிலையைக் கவனித்தால் என்னிடம் இருக்கும் பை பரவாயில்லையே என்று தோன்றுகிறது! அதனால் வேறு பை ஒன்றையும் மாற்ற வேண்டாம். இந்தப் பையுடன் திரும்பி வீட்டுக்குப் போனால் போதும்!" என்று நினைத்தான். எல்லோரும் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்... கோயிலில் அந்தக் குரல் மறுபடியும் கேட்டது.

"எல்லோரும் அவரவர் பைகளை சுவரிலே தொங்கவிடுங்கள்... தீடீரென்று விளக்குகள் அணையும்! மணி அடிக்கப்படும்... அது தான் அடையாளம். அந்த சமயத்தில் இருட்டில் உங்களுக்கு வேண்டிய பையை நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். வெளிச்சம் இருக்கும்போதே உங்களுக்குப் பிடித்த பையைப் பார்த்து நீங்கள் நின்றுகொள்ளலாம்" என்றது அந்தக் குரல்.

திடீர் என்று விளக்கு அணைந்தது... மணி அடித்தது... கொஞ்ச நேரம் கழித்து மறுபடியும் விளக்குகள் எரிந்தது. இப்போது பார்த்தால்... எல்லோரும் அவரவர் பையையே கெட்டியாக பிடித்துக் கொண்டு நிற்கிறார்கள்! இவனும் அப்படியே நிற்கிறான். இவன் மெதுவாக பக்கத்தில் நிற்பவனிடம் கேட்டான்.

"ஏன் நீங்கள் பையை கையில் வைத்திருக்கீறீர்கள்? சுவரிலே மாட்டவில்லையா?" என்றான்.

"இல்லை! நீ ஏன் கையிலேயே வைத்திருக்கிறாயோ அதே காரணத்திற்காகத்தான் நாங்களும் வைத்திருக்கிறோம். நமது கவலைகளைப் பற்றி நமக்கு ஓரளவுக்காவது தெரியும்... ஆனால் மற்றவர்கள் கவலைகள் நமக்குப் பரீட்சயமில்லாதது! பழக்கமில்லாதது! அதனாலே நமக்கு தெரிந்த கவலைகளை சமாளிப்பது சுலபம். தெரியாததை சமாளிக்க வேண்டும் என்றால் மறுபடியும் ஆரம்பத்தில் இருந்து தொடங்க வேண்டும்! அதனால் பழைய நண்பர்களுடன் வாழ்வதே மேல்!" என்றார்கள்.

அதற்குப்பின்னர் அவன் அவன் தன்னுடைய பையே போதும் என்று வீட்டுக்குத் திரும்பி போய்விட்டனாம்!

இது ஒரு பெரியவர் சொல்லியிருக்கிற கதை (ஓஷோ). அதனாலே நம்மிடம் இருக்கும் கஷ்டங்கள் தான் பெரியது. அதை இன்னொருத்தரிடம் கொடுத்துவிட்டு மாற்றிக்கொள்ளலாம் என்று நினைப்பது தவறு. இதேமாதிரி இன்னொரு சம்பவம்.

ஒரு ஊரில் ஒரு நாள் இரவு... ஆகாயத்திலிருந்து கடவுள் குரல் கேட்டது. "இந்த ஊரில் இருக்கும் மக்களிலேயே கொஞ்சம் கூட கவலையே இல்லாத ஆள் யார் என்று எனக்குத் தெரியவேண்டும். அதனால் எல்லோரும் அவரவர் கவலைகளை ஒரு பையில் போட்டு எடுத்துக்கொண்டு கோயிலுக்கு வாருங்கள்!" என்றார் கடவுள்.

உடனே வரிசையாக எல்லோரும் வர ஆரம்பித்தார்கள்... எல்லோரின் கையிலேயும் பை இருந்தது... சிறியதும் பெரியதுமான கவலையே இல்லாத ஆள் யார் என்று தேடினார் கடவுள்!

ஒரே ஒரு ஆள் மட்டும்தான் கையில் எதுவும் இல்லாமல் வெறுங்கையை வீசிக்கொண்டு ஜாலியாக நடந்து வந்துகொண்டிருந்தான். கடவுள் அவனிடம் போனார். "உனக்கு கவலையே இல்லையா?" என்று கேட்டார்.

"எனக்கும் சில கவலையெல்லாம் உண்டு!" என்றான் இவன். "எங்கே அதெல்லாம்?" என்று கேட்டார் கடவுள். "பின்னால் லொறியில் வந்துகொண்டிருக்கிறது!" என்றான் அவன்.

# விரல்களே விழிகளாக...

ஐம்புலன்களில் முதன்மையானது கட்புலன். கண்களின் துணைகொண்டு நாம் இந்தக் காசினியைத் தரிசிக்கின்றோம். ஆழகை ரசிக்கின்றோம். ஆடியோடித் திரிகின்றோம், இன்னும் எத்தனையோ எத்தனையோ. இத்தனைக்கும் காரணமான விழிகளில் ஒளி இல்லை என்றாகிவிட்டால்? எண்ணிப்பார்ப்பதே கடினம்தான். ஆம், முன்னொரு காலத்தில் விழிப்புலனற்றவர்கள் வாழ வழியற்றவர்களாய், குடும்பத்துக்குச் சுமைகளாய்த் தம் வீடுகளிலேயே முடங்கிக் கிடந்தார்கள்.


அப் பரிதாப நிலையிலிருந்து அவர்களை மீட்டெடுத்து, அவர்கள் வாழ்வில் ஒளியூட்டிய பெருமைக்குரியவர் லூயிபிறேயில் ஆவார். யார் இந்த லூயிபிறேயில்? அப்படி அவர் என்னதான் செய்துவிட்டார்? பிரான்ஸ் தேசத்திலே ஒரு வறிய குடும்பத்தில் நான்காவது பிள்ளையாக லூயி 04.01.1809 இல் பிறந்தான். அவனின் தந்தை தோலைப் பயன்படுத்திப் பல்வேறு பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

ஒரு தடவை தந்தை தோலில் துளையிடப் பயன்படுத்தும் கூரிய ஊசியை அவருக்குத் தெரியாமல் எடுத்து விளையாடிக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக அது லூயியின் கண்ணில் குத்தியதால் லூயி தனது மூன்று வயதிலேயே ஒரு கண் பார்வையை இழக்க நேர்ந்தது. அக்காலத்தில் தகுந்த மருத்துவ வசதிகள் இல்லாமையால் லூயியின் ஒரு கண்ணில் ஏற்பட்ட தொற்று மறு கண்ணுக்கும் பரவி அவன் தனது ஐந்து வயதை அடைவதற்கு முன்னமே இரு விழிகளையும் இழக்க நேர்ந்தது.

பெற்றோர்கள் சொல்லொணா வேதனையடைந்தனர். லூயியை அருகிலுள்ள ஒரு பாடசாலையில் சேர்த்தனர். ஆனால், எழுதாமல், வாசிக்காமல் வாய்மொழி மூலமாக அவனால் பெரிதாக எதைத்தான் கற்றுவிட முடியும்? காலம் நகர்ந்தது. லூயி தனது பத்தாவது வயதில் பாரிசிலுள்ள உயர் நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டான். அங்கு அவனுக்கு வாசிக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டது. எழுதுவதற்கல்ல. தாள்களிலே புடைப்பாக இருந்த எழுத்துக்களை விரல்களால் தொட்டு எழுத்துக்களை இனங்கண்டு வாசிக்க வேண்டும்.

இந்த முறை மிகமிகக் கடினமாக இருந்தது. லூயி இந்த நிலை கண்டு மிகவும் மனம் வருந்தினான். "என் போன்றவர்கள் இலகுவாக எழுதவும் வாசிக்கவும் உகந்த ஒரு எழுத்து முறையை நான் ஏன் உருவாக்கக்கூடாது" என்ற கேள்வி அவன் மனதில் எழுந்தது. நாளுக்கு நாள் அதுவலுப் பெற்றும் வந்தது. இந்த வேளையில் தான் லூயிக்கு ஒரு தகவல் கிடைத்தது. சாள்ஸ் பாவியர் என்ற பிரெஞ்சு இராணுவ உயர் அதிகாரியொருவர் இராணுவ இரகசியங்களைப் பாதுகாப்பாகப் பரிமாறுவதற்கும் இருட்டில் வைத்தே விரல்களால் தொட்டு வாசிக்க உகந்ததுமான, புள்ளிகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் எழுத்து முறையினை உருவாக்கினார் என்றும் பிரெஞ்சு இராணுவத்தால் அம்முறையைச் சரிவரப் பயன்படுத்த முடியாது போனதால் அது கைவிடப்பட்டது என்றும் லூயிக்குத் தெரிய வந்தது.

புள்ளிகளை அடிப்படையாகக் கொண்ட அந்த எழுத்து முறையில் அவனுக்கு ஏனோ ஓர் ஈர்ப்பு ஏற்பட்டது. அதன்




உலக பிறேயில் தினத்தை முன்னிட்ட இக் கட்டுரை பிரசுரமாகிறது.

காரணமாக அந்த இராணுவ உயர் அதிகாரியைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலும் ஏற்படலாயிற்று. அதற்கான ஒரு சந்தர்ப்பமும் அவனுக்கு விரைவிலேயே கிட்டியது. அந்த எழுத்து முறைபற்றி அவரிடம் கேட்டறிந்த லூயி அதனைத் தான் பயன்படுத்துவதற்கான அனுமதியையும் கோரினான். "இந்த எழுத்து முறை இராணுவத்தால் பயன்படுத்த முடியாதென்று முற்று முழுதாகக் கைவிடப்பட்டுவிட்டது. இதனை நீ தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்" என அவர் அனுமதி வழங்கினார். மகிழ்ச்சியோடு விடைபெற்ற லூயி அந்த எழுத்து முறை மீது தன் கவனத்தைச் செலுத்தலானான்.

பன்னிரண்டு புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டமைந்த அந்த எழுத்து முறையை ஆறு புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டதாய் மாற்றியமைத்தான் லூயி. அப்போது ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அதுவரை பயன்படுத்த முடியாததாய், பயனற்றதாய் இருந்த அந்த எழுத்து வடிவம் எளிதாய்ப் பயன்படுத்தக் கூடிய அதி உன்னத எழுத்து வடிவமாய்ப் பரிணமித்தது.

இலகுவாய் எழுதவும் தொட்டு வாசிக்கவும் கூடிய அந்த எழுத்து முறையைக் கட்புலனற்றோருக்கு அறிமுகப்படுத்த லூயி முயன்ற போது அவன் எதிர்கொண்ட சவால்கள் ஒன்றல்ல இரண்டல்ல. யாருமே லூயியின் எழுத்து முறையை ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக, லூயி கற்ற பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் அந்த முறையைத் தடை செய்யவும் முயன்றாராம்.

லூயி பிறேயில் தன் அறிவுத் திறன் காரணமாகப் பிற்காலத்தில் தான் கற்ற உயர் நிலைப் பள்ளியில் ஆசியரியராக நியமனம் பெற்றார். எனினும், அப்போது கூட அவர் உருவாக்கிய குற்றெழுத்து முறை அங்கீகரிக்கப்படவில்லை.

லூயி பிறேயில் தனது 43 ஆவது வயதில் காசநோயால் பீடிக்கப்பட்டு இறையடி எய்தினார். அவர் மறைந்து இரண்டு ஆண்டுகளின் பின்னரே அவர் உருவாக்கிய எழுத்து முறை பிரெஞ்சு அரசால் அங்கீகரிக்கப்பட்டு, "பிறேயில் எழுத்து" என நாமமும் சூட்டப்பட்டது. பிறேயில் எழுத்து முறை பார்வையற்றவர்களின் கல்வி வரலாற்றில் ஒரு பெரும் புரட்சி நிகழ வழி சமைத்தது. அதுவரை மூழக்கிடந்த அவர்களது கல்விக் கண்கள் அகலத் திறந்து கொண்டன. பிற்காலத்தில் மில்டன், ஹெலன் கெல்லர் போன்ற மாபெரும் அறிஞர்கள் உருவாவதற்கும் இந்த பிறேயில் முறையே காரணம் என்று கூறினும் அதில் மிகையேதுமில்லை.

லூயி பிறேயில் பிஞ்சு வயதில் தன் கண்களை இழந்தாலும் தன் அரிய கண்டுபிடிப்பின் மூலமாக எண்ணற்ற கண் பார்வையற்றோரின் அறிவுக் கண்களைத் திறந்து வைத்திருக்கின்றார். இன்றுவரை பார்வையற்றவர்களின் கல்வியின் அடிநாதமாய், ஆணிவேராய் பிறேயில் எழுத்து முறை விளங்குகின்றது. இந்த பிறேயில் எழுத்து வடிவத்துக்கு நிகராக இற்றைவரை வேறெதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதே நிதர்சனம். விழிப்புல வலுவிழந்தோரின் வாழ்வில் ஒளியாக, வழியாக, விழியாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் பிறேயில் எழுத்து வடிவத்தை மேலும் மகிமைப்படுத்தும் வகையிலும் அதனை இவ்வுலகுக்களித்த மனிதகுல மாணிக்கமாம் லூயி பிறேயிலை கௌரவப்படுத்தும் வகையிலும் அப் பெருமகனார் பிறந்த தினமான ஜனவரி 4 ஆம் திகதியை உலக பிறேயில் தினமாக ஐக்கிய நாடுகள் சபை கடந்த ஆண்டு பிரகடனப் படுத்தியது.

இன்று கணனி மற்றும் நவீன சாதனங்களின் வருகையால் இளம் சந்ததியினரிடையே பிறேயில் கற்கும் ஆர்வம் குறைந்து வருகின்ற ஒரு போக்கை அவதானிக்க முடிகின்றது. அதேவேளை, இந்த வருந்தத்தக்க நிலை மாற வேண்டும், எதிர்கால சந்ததியினர் பிறேயில் கற்றுக்கொள்ள வழிசெய்ய வேண்டும் என்ற முனைப்பு மெல்ல மெல்ல முகிழ்த்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையில் உலக பிறேயில் தினத்தை ஐ.நா. சபை பிரகடனப்படுத்தியுள்ளமையானது காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் காத்திரமான ஒரு செயற் பாடாகவே அமைகின்றது.

ஆறுமுகம் ரவீந்திரன்,
தலைவர், வாழ்வகம், சுன்னாகம்.

## யாழ்: பிரதிப் பொலிஸ்மா அதிபராக கபில கடுவத்த நேற்று பதவியேற்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபராக கபில கடுவத்த யாழிலுள்ள அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை பதவியேற்றார்.

முன்னதாக நீர்கொழும்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றி வந்த அவருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டு யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமனம் வழங்கப்பட்டது.

இதேவேளை, யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி வகித்த மகேஷ் சேனாரட்ன கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு மாற்றலாகிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (இ-18)

## சிறைச்சாலை மதிலை இணைத்து வீடுகளை நிர்மாணிக்கும் கலாசாரம் இலங்கையில் தான் உள்ளது-நிமால் கட்டம்



(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தண்டனை பெற்றுவரும் கைதிகளின் நன்னடத்தையை மாதாந்தம் ஆராய்ந்து அவர்களை சமூகமயமாக்கும் வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருவதாக நீதி, மனித உரிமைகள், சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன் கடந்த காலங்களில் இந்த வேலைத்திட்டங்கள் முறையாக இடம்பெறாதமையும் சிறைச்சாலைகளில் இட நெருக்கடிக்குக்காரணமாகும்.

சிறைச்சாலை மதிலை இணைத்து வீடுகளை நிர்மாணித்திருக்கும் நாடு இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டிலும் காண முடியாது. இது தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கும் அவற்றுக்கு வர்ணம் பூசுவதற்கும் தனியார் நிறுவனங்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட சீமெந்து மற்றும் நிறப்பூச்சுகளை சிறைச்சாலை ஆணையாளருக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெலிக்கடை சிறைச்சாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 340 | 300 | 240 | 320 | 250 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 180 | 170 | 160 |
| பச்சைமிளகாய் | 340 | 280 | 240 | 300 | 500 |
| தக்காளி | 250 | 200 | 200 | 170 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 | 100 |
| கோவா | 150 | 120 | 140 | 110 | 160 |
| கரட் | 350 | 350 | 350 | 220 | 400 |
| பூசணி | 60 | 70 | 60 | 60 | 80 |
| புடோல் | 200 | 180 | 140 | 80 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 50 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 400 | 380 | 500 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 160 | 160 | 140 |
| பாகற்காய் | 350 | 250 | 350 | 310 | 480 |
| வெண்டிக்காய் | 140 | 160 | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 90 | 120 |
| பயற்றங்காய் | 250 | 300 | 200 | 180 | 240 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 340 | 400 |
| பீற்றூட் | 260 | 200 | 240 | 200 | 280 |
| கறிமிளகாய் | 280 | 200 | 240 | 220 | 280 |
| முருங்கைக்காய் | 1200 | 1500 | 800 | 600 | 1000 |
| போஞ்சி | 250 | 250 | 240 | 190 | 200 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 240 | 280 | 240 |
| கீரை - 1பிடி | 80 | 80 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 400 | — | — | — |
| முள்ளங்கி | 120 | 160 | 160 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 50 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | 120 | 80 | 120 | 120 |

# மத்திய வங்கி தடயவியல் கணக்கறிக்கை மறைக்கப்படுவதற்கான காரணம் என்ன?

## நாடாளுமன்றில் ஹர்ஷ, கருணாநாயக்க கேள்வி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த விடயங்கள் சம்பந்தப்பட்ட மத்திய வங்கியின் தடயவியல் கணக்காய்வு அறிக்கை சபாநாயகரிடம் கிடைத்த போதிலும் சபைப்படுத்தாது இருப்பது ஏனென சபையில் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சியினர் மத்திய வங்கி பிணைமுறி ஊழலுடன் தொடர்புபட்ட எவராக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காம் கூட்டத்தொடர் நேற்று ஆரம்பித்த நிலையில் பிற்பகல் ஒரு மணிக்கு சபை அமர்வுகள் கூடியது.

இந்நிலையில் சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதனை வலியுறுத்தினர். இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறுகையில்,

பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கள் கலைக்கப்பட்ட காரணத்தால் அறிக்கைகள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதேபோல் கோப் குழு கலைக்கப்பட்டுள்ள காரணத்தினால் இத்தனை காலமாக விசாரணைகளை முன்னெடுத்த மத்திய வங்கியில் பிணைமுறி விடயமும் மூடி மறைக்கப்படுவதாக எண்ணத்தோன்றுகின்றது.

எனினும் மத்திய வங்கியால் கோப் குழுவிற்கு வழங்கப்பட்ட தடயவியல் கணக்காய்வு அறிக்கை சபாநாயகர் கைகளில் உள்ளது. அதனை சபைப்படுத்த வேண்டும் என்றார்.

இதனையடுத்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க கூறுகையில்,

கோப் குழுவின் மூலமாக சபாநாயகருக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கி தடயவியல் கணக்கறிக்கை ஏன் மறைக்கப்படுகின்றது. இதன் உண்மைத்தன்மையை சபை அறிந்துகொள்ள வேண்டும். அதேபோல் கோப் குழுவின் தலைவராக சுனில் ஹந்துன் நெத்தியை மீண்டும் நியமிக்க வேண்டும். விசேடமாக சபாநாயகர் வசம் இருக்கும் தடயவியல் கணக்கறிக்கையை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

### ஒரு கோடி ரூபாய் செலவில்

## யாழில் நாய்களுக்கான காப்பகம்





(குப்பிழான்)

தியாகி அறக்கொடை நிறுவனத்தினரால் யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக அமைக்கப்பட்ட நாய்களுக்கான காப்பகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.அரியாலை ஈச்சங்காடு கொட்டுக் கிணறு பிள்ளையார் கோவில் முன்பாக அமைக்கப்பட்ட "நன்றியுள்ள ஜீவன்களின் காப்பகம்" எனும் பெயரிலான இந்த நாய்களுக்கான காப்பகத்தைத் தியாகி அறக்கொடையின் ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரன் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதேவேளை, வீதிகளில் ஏற்படும் விபத்துக்களையும் மற்றும் நாய்க்கடியினால் ஏற்படும் நீர்வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல சமூக நலன் விரும்பிகளின் வேண்டுகோளுக்கமைய தியாகி அறக் கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் தியாகேந்திரனின் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் காப்பகம் அமைக்கப்பட்டது. இதேவேளை, கிளிநொச்சி இயக்கச்சிப் பகுதியில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் பெரு முயற்சியால் பல ஏக்கர் நிலப் பரப்பில் சிவபூமி அறக்கட்டளையினரால் நாய்களுக்கான சரணாலயமொன்று அமைக்கப்பட்டுள்ளது குறிப் பிடத்தக்கது. (இ-18)

# தமிழ் அரசியல் கைதிகள் சிறையிலேயே உயிரிழப்பதை அனுமதிக்க முடியாது

## வியாழேந்திரன் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளை உயிருடன் விடுதலை செய்வதற்காக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி முழு முயற்சிகளையும் மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதியொருவர் உயிரிழந்துள்ளதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு நேற்று வெள்ளிக்கிழமை சென்றிருந்த அவர் ஊடகங்கள் முன்னிலையில் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அரசியல் கைதியாக 28 வருடங்களாக மகசின் சிறைச்சாலையில் தடுத்த வைக்கப்பட்டிருந்த செல்லப்பிள்ளை மகேந்திரன் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்த இவரை விடுதலை செய்வதற்காக பல முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டிருந்த போதும் சடலமாகவே மீட்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நான் பாராளுமன்றத்திற்கு தெரிவானதையடுத்து தமிழ் அரசியல் கைதிகளை அடிக்கடி சந்தித்து வந்தேன். இதன்போது மகேந்திரன் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்தது.

பின்னர் அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெற்றுக் கொடுப்பதற்காக சிறை அதிகாரிகளுடன் கலந்துரையாடி பாராளுமன்றத்திலும் அந்த விடயம் தொடர்பில் அறிவித்திருந்தேன். அன்றைய தினமே நீதி அமைச்சரிடமும் இது தொடர்பில் கலந்துரையாடினேன்.

1993 ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முன்னால் வைத்து சந்தேகத்தின் பேரிலே மகேந்திரன் கைது செய்யப்பட்டார். மட்டகளப்பு - மொரக்கொட்டான்சேனை பகுதியைச் சேர்ந்த இவர் கைது செய்யப்படும் போது இவரது வயது 18 ஆக இருந்தபோதும் 19 வயது என வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட இவருக்கு எதிராக 1994 ஆம் ஆண்டே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வந்ததுடன் மேன்முறையீடும் செய்யப்பட்டது. இந்நிலையிலே அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

ஆயுள் தண்டனை கைதியான இவர் 18 வயதிலே கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டதுடன், தனது உறவினர்களின் சுகதுக்கங்களில் கூட கலந்து கொள்ள முடியாமல் மனதளவில் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தனது 46 ஆவது வயதிலே உயிரிழந்தார்.

2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற அரசியல் மாற்றத்தின் போது அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் நீதி அமைச்சருடன் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தபோதும் அது சாத்தியப்படவில்லை.

கிடைத்த வாய்ப்புக்களை தமிழ் அரசியல் தலைவர்கள் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. கடந்த அரசாங்கம் தமிழ் அரசியல் தலைவர்களின் ஒத்துழைப்பு இன்றி ஆட்சியை முன்னெடுக்க முடியாத நிலையிலேயே இருந்தது.

அதனைக் கவனத்திற்கொண்டு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் அதனைத் தவறிவிட்டனர்.

தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கலந்துரையாடி இவ்வாறு சிறை வைக்கப்பட்டுள்ளவர்களில் மீண்டும் ஒருவரை சடலமாக மீட்காது, அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இதேவேளை மகேந்திரனின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன் அவரின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் போது மிலேனியம் சவால்கள் ஒப்பந்தத்தை சஜித் எம்.பி.ஏன் எதிர்க்கவில்லை?

## அமைச்சர் செஹான் கேள்வி

(கொழும்பு)

**மிலேனியம் சவால்கள் ஒப்பந்தத்துக்கு தற்போது எதிர்ப்பு தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்த போது ஏன் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் திட்டங்கள் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கேள்வியெழுப்பினார்.**





நிதியமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ எம்.சி.சி.ஒப்பந்தத்தை புறக்கணிப்பதற்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக இப்போது கூறுகின்றார்.

அவர் அமைச்சரவையில் அங்கத்துவம் வகித்த காலத்திலேயே இந்த ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது. இந்த ஒப்பந்தம் நாட்டுக்கு பாதகமானது என்று தெரிந்திருந்தால் ஆரம்பத்திலேயே அதற்கு அவர் எதிர்ப்பு தெரிவிக்காதது ஏன் என்பதே எமது கேள்வியாகும்.

தற்போது நாம் எம்.சி.சி.ஒப்பந்தத்தில் கையெழுத்திட முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி போலியான பிரசாரங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தில் என்ன விடயங்கள் கூறப்பட்டிருக்கின்றன என்பது தொடர்பில் தெளிவினைப் பெற்றுக் கொள்வதற்கும் அது தொடர்பில் முழுமையாக அறிந்து கொள்வதற்குமே ஒப்பந்தம் தொடர்பில் ஆராய விஷேட குழு நியமிக்கப்பட்டது.

எம்.சி.சி.ஒப்பந்தம் மாத்திரமின்றி எட்கா, சோபா மற்றும் சிங்கப்பூர் ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்வது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியிருக்கிறது. மாறாக ஐ.தே.க. கூறுவதைப் போன்று நாம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முயற்சிக்கவில்லை. மக்களால் புறக்கணிக்கப்பட்ட குழுவினரால் முன்வைக்கப்படும் இவ்வாறான போலியான பிரசாரங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துவதில்லை.

நாட்டிலுள்ள காணிகளை விற்பனை செய்வதற்கு எமது அரசாங்கம் முயற்சிப்பதாகவும் ஐ.தே.க. குற்றம் சுமத்துகிறது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினதும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினதும் ஆட்சியின் கீழ் எந்தச் சந்தர்ப்பத்திலும் தேசிய சொத்துக்கள் விற்கப்படமாட்டாது என்று மக்களுக்கு உறுதியளிக்கின்றோம்.

அத்தோடு வரிகளை குறைத்து எவ்வாறு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்று கேள்வியெழுப்பப்படுகிறது. வரிகளை குறைக்காமல் ஒருபோதும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது.

வரிகளை குறைக்கும் அதே வேளை மறுபுறம் அநாவசிய செலவுகளை மட்டுப்படுத்தினால் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அத்தோடு மதுபான உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் எதனோல் இறக்குமதி இடை நிறுத்தப்பட்டது. இதன் மூலம் தேசிய உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்க முடியும். தேசிய உற்பத்தியாளர்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதில் அரசாங்கம் பின்னிற்காது.

இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் கடந்த அரசாங்கத்தால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனையும் எம்மால் விரைவில் மீளச் செலுத்த முடியும்.

வரி குறைப்புக்கள் கடனை மீளச் செலுத்துவதில் எவ்விதத்திலும் தாக்கம் செலுத்தாது என்பதோடு கடனை மீள செலுத்துதல் எமது அரசாங்கத் துக்கு பாரிய சவாலாகவும் அமை யாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஈழத்துச்சிதம்பர பாத யாத்திரை

(யாழ்ப்பாணம்)

திருவெம்பா விரதத்தை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபை ஆண்டுதோறும் நடத்தும் ஈழத்துச் சிதம்பர பாத யாத்திரை நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இதில் வழமைபோன்று இவ் வருடமும் வடக்கு, கிழக்கில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கவுள்ளனர்.

"மகேசன் பணிக்காய் அர்ப்பணித்து மானிடம் காப்போம்" என்ற தொனிப்பொருளுடன் இடம்பெறும் இவ்வருட பாத யாத்திரை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் மாதகல் சம்பில்துறையில் சைவ மகா சபையால் நிர்மாணிக்கப்பட்ட 21 அடி உயர சிவபெருமான் திருச்சொரூப முன்றலில் இருந்து ஆரம்பமாகும்.

அங்கிருந்து சாந்தை சிதம்பரேஸ்வரர் ஆலயம், சாந்தை வீரபத்திரர் ஆலயம், பனிப்புலம் முத்துமாரி அம்மன் ஆலயம், சுழிபுரம் பறாளாய் முருகன் மற்றும் ஈசுர விநாயகர் ஆலயங்கள், சுழிபுரம் மத்தி கறுத்தனார் தோட்டம் துர்க்கை அம்மன் ஆலயம், சுழிபுரம் மேற்கு அரிகர புத்திர ஐயனார் ஆலயம், சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், சுழிபுரம் பெரியபுலோ ஞானபைரவர் ஆலயம், மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர், முருகன் ஆலயங்கள், மூளாய் இராவணேசுவரம், வலந்தலை மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலயம், கிழவன் காடு முருகன் ஆலயம் முதலான ஆலயங்களைத் தரிசித்தவாறு ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடையும்.

பாத யாத்திரையாகச் செல்லும் பக்தர்களுக்கு பொன்னாலைச் சந்தியிலுள்ள நாராயணன் தாகசாந்தி நிலையத்தினரால் அன்னதானம் வழங்கப்படும். பாதயாத்திரையில் பங்குகொள்ளும் அடியார்கள் அன்றைய தினம் காலை 7 மணிக்கு முன்பாக சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தருமாறு சைவ மகாசபை கேட்டுக்கொண்டுள்ளது. (இ-9)

### வடமராட்சிக் கிழக்குப் பகுதிகளில்

# கிணற்று நீரைப் பயன்படுத்த முடியாத நிலை

## பிரதேச செயலக நீர் விநியோகமும் நிறுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பெய்த அடைமழை காரணமாக வடமராட்சிக் கிழக்குப் பகுதிகளில் உள்ள குடிநீர் கிணறுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததால் தாம் குடிநீருக்காக அல்லல்படுவதாக அப்பகுதிமக்கள்கவலைதெரிவித்தனர்.

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் கடும் மழையால் குடி நீர்க் கிணறுகளுக்குள் வெள்ள நீர் உட்சென்றதால் துர்நாற்றம் வீசுகின்ற நிலையில் நீரின் நிறமும் மாறியுள்ளது.

இந்நிலையில் மருதங்கேணிப் பிரதேச செயலகத்தால் வத்திராயன், உடுத்துறை,ஆழிய வளை ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக நீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு நீர் வழங்கப்பட்டு வந்தது.

எனினும் ஒரு வாரம் மட்டுமே குறித்த பிரதேச செயலகத்தால் நீர் வழங்கப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்டதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டினர். எனவே குடிநீருக்காகப் போராடும் தமக்கு உரிய அதிகாரிகள் உடன் தீர்வைப் பெற்றுத்தர முன்வர வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் மருதங்கேணிப் பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, குடிநீர்ப் பிரச்சினை நிலவுவது உண்மையெனக் கூறியதுடன் தம்மிடம் நிதி இல்லாத காரணத்தால் தொடர்ச்சியாக நீர் வழங்க முடியவில்லை எனவும் இப் பிரச்சினை குறித்து யாழ். மாவட்டச் செயலகத்துக்கு தெரியப்படுத்தியதாக கூறினார். (இ-10-64)

# முதுமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கல்வி முதுமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கல்வியியல் இளமாணிப் பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது இளமாணிப் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டமேற் கல்வி டிப்போமாவில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முதவரியில் பிரவேசித்து 15.01.2020 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு உதவிப்பணிப்பாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ



புதுவருடத்தை முன்னிட்டு நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எம்.எஸ்.ஜெயதிலக கரணவாயில் அமைந்துள்ள சாய்பாபா கோயிலில் வழிபட்டார்.
(படம்:-மகாலிங்கம்)

# மணல் அகழ்வுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்



(புத்தளம்)

புத்தளம் - உடப்புப் பகுதியில் மணல் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

உடப்பு நகரில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் முற்பகல் 11.30 மணியளவில் முடிவடைந்தது.

அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து மணல் அகழ்வு இடம்பெறும் பூனைப்பிட்டி பகுதிக்கு பேரணியாகச் சென்றனர்.

மேலும் ஆர்ப்பாட்டக்காரர்கள், பூனைப்பிட்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மணல் அகழ்வு மற்றும் மணலை ஏற்றிச் செல்வதால் உடப்பு - கரம்பை வீதியின் பல இடங்கள் பாதிக்கப்படுவதாகவும் இந்த மணல் அகழ்வு காரணமாக நீர்வளம் உள்ளிட்ட தங்களின் வளங்கள் அழிவடைவதாக சுட்டிக்காட்டி எழுதப்பட்ட பல்வேறு சுலோகங்களை ஏந்தியாறு கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஆராச்சிக்கட்டுப் பிரதேச சபைத் தவிசாளர் கே.தெட்சணாமூர்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிகை அலங்கார நிலையத்திற்குள் வைத்து கூரிய ஆயுதத்தால் குத்தி ஒருவர் கொலை

(படபொல)

படபொல- நிந்தான் பகுதியில் சிகை அலங்கார நிலையம் ஒன்றுக்குள் வைத்து கூரிய ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு, சிகையலங்காரம் செய்து கொள்வதற்காக சென்ற இளைஞனை, மது போதையில் இருந்த ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

மேலும் சம்பவத்தின்போது பலத்த காயமடைந்த குறித்த இளைஞனை, பலபொல வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்தபோதே உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பலப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர் குறித்த பகுதியில் இருந்து தப்பியோடியுள்ளார். இந்நிலையில் அவரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை படபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறு ஏற்றுமதி பயிர்களுக்கான நாற்றுகளை இலவசமாக வழங்க கமத்தொழில் அமைச்சு தீர்மானம்



(கொழும்பு)

சிறு ஏற்றுமதி பயிர் இலவச நாற்றுகளை விவசாயிகளுக்கு வழங்கி உள்ளூர் சிறு ஏற்றுமதித்துறையை முன்னேற்ற எதிர்பார்த்திருப்பதாக தெரிவித்த ஏற்றுமதி கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர பெலவத்த, செவனகல சீனி தொழிற்சாலைகளின் நட்டத்தையும் ஈடு செய்யும் வகையில் செயற்றிட்டங்களும் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூர் சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கான விவசாயத்தை அதிகரிக்கும் நோக்கில் விவசாயிகளுக்கு சிறு ஏற்றுமதி பயிர்களுக்கான நாற்றுகளை இலவசமாக வழங்கத் தீர்மானித்துள்ளோம். வெளிநாடுகளில் இருந்து சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கான இறக்குமதி தற்போது தடை செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் விவசாயிகளை முன்னேற்றும் வகையில் இந்தச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கடந்த நான்கரை வருட காலத்தில் உள்ளூர் விவசாயிகள் மிளகாய் ஒரு கிலோவினை 450 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியாத நிலையில் இருந்தனர். ஆனால் இறக்குமதியை தடை செய்ததன் பொருட்டு தற்போது 750 ரூபா வரையிலும் விற்பனை விலையினை விவசாயிகள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

எங்கள் எதிர்பார்ப்பு உள்ளூர் விவசாயிகளை பலம் மிக்கவர்களாக மாற்ற வேண்டும்.

விவசாயிகளுக்கு இலவச நாற்றுகளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஏற்றுமதி இலாபத்தை அதிகரிக்க முடியும். அதற்காக விவசாயிகளுக்கான சலுகைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய மேலும் பலதரப்பட்ட சலுகைகள் வழங்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1935

### ராஜன்


யாருடனும் வாதாடாதே!!!



யாரும் உலகில் தோற்றுப்போக விரும்புவதில்லை...!!!

### சுகி

எதற்கு எடுத்தாலும் கோபப்படுவது ஒரு குறைபாடு அல்ல...



அது அன்புக்கு ஏங்கும் உள்ளமாகத்தான் இருக்கும்...

### தனுஷா

எதுவும் நிலை இல்லை...




இதற்கு இடையில் எத்தனை போராட்டம் ஏமாற்றம்

### சம்யா

வாழ்க்கையில் எந்த சூழ்நிலையிலும் நம்மை தனிமையில் விடாத ஒரு உறவையாச்சும் சம்பாதிக்க வேண்டும்...




### அச்சுதன்



ஒவ்வொரு பெண்ணிற்கும் தன் சகோதரன் தான் அவளின் முதல் குழந்தை...!

### மயூரி

நீ உன் வலது காலை முன்னே எடுத்து வை...



உன் இடது கால் தானாகவே முன்னால் வந்துவிடும்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 2020ஆம் ஆண்டு புத்தாண்டு பலன்கள்

## 01.01.2020 - 31.12.2020

## யோசித்து செயற்பட்டால் யோகம் வந்து சேரும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



புத்தாண்டின் தொடக்கம் உங்களுக்கு வளமாக அமைந்தாலும் குருப் பெயர்ச்சியின் விளைவாக அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் வருவதாலும் சனிப்பெயர்ச்சியின் விளைவாக அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கமும் ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக அஷ்டமத்து ராகுவும் செயற்படப் போகும் நேரமாக இருக்கிறது. இருப்பினும் அந்தந்தக் கிரகங்கள் பெயர்ச்சியாவதற்கு முன் வளர்ச்சியும் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் அமைப்பும் நன்றாக உள்ளது.

தனாதிபதி செவ்வாய் தன ஸ்தானத்தில் இருப்பதால் ஆண்டின் தொடக்கத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். உங்களுக்கு சம்பள உயர்வும் உங்கள் வாழ்க்கைத் துணைக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கலாம். எல்லையில்லாத நற்பலன்களை இந்த ஆண்டின் தொடக்கம் உங்களுக்கு வழங்கப்போகிறது. இடம், பூமியாலும் இலாபம், உடன்பிறப்புகளால் முன்னேற்றம் என்ற நிலை உருவாகும்.

தொழில் ஸ்தானாதிபதி சந்திரன் பஞ்சம ஸ்தானத்தில் இருப்பதாலும் குருவின் பார்வை லாப ஸ்தானத்தில் பதிவதாலும் சுய தொழில் செய்பவர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். பெரிய மனிதர்களின் ஆதரவும் கிடைக்கும். முதலீடுகள் அதிகம் செய்து தொழிலை பெருக்கிக் கொள்ள முன் வருவீர்கள். சென்ற ஆண்டில் ஏற்பட்ட சிக்கல்கள் இப்பொழுது அகலும்.

சகாய ஸ்தானத்தில் சூரியன், புதன், வியாழன், கேது, சனி ஆகிய 5 கிரகங்களின் சேர்க்கை உள்ளது. குறிப்பாக லாபாதிபதி சூரியன் 9, 12 இற்கு அதிபதியான புதன், 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி ஆகியோரோடு கேதுவும் குருவும் இணைந்திருப்பதால் வழக்குகளில் சாதகமான நிலை ஏற்படும். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வரலாம். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள ஆர்வம் காட்டுவீர்கள். மாற்று இனத்தவரின் ஒத்துழைப்போடு உங்கள் கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

### குரு பார்வை கொடுக்கும் பலன்கள்

ஆண்டு தொடங்கும் பொழுது, குரு பகவான் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அவரது பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே களத்திர ஸ்தானம், பிதுர்ரார்ஜித ஸ்தானம் மற்றும் லாப ஸ்தானம் ஆகிய மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. இந்தக் காலகட்டத்தில் காரியங்கள் உடனடியாக நடைபெறா விட்டாலும் கடைசி நேரத்திலாவது கைகூடிவிடும். இப்போது பிள்ளைகளுக்கு திருமணப் பேச்சை தொடங்கலாம். 9 ஆம் இடத்தில் குருவின் பார்வை பதிவதால் பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். லாப ஸ்தானத்தை குரு பார்ப்பதால் பணப் பிரச்சினைகள் அகலும். எதிர்பார்த்த தொகை கைகளில் புரளும். பல நாட்களாக வரவேண்டிய பாக்கிகள் கூட வரலாம். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் கிடைக்கும்.

### மகர குருவின் சஞ்சாரம்

8.7.2020 முதல் 9.9.2020 வரை குருபகவான் தனுசு இராசிக்குள்ளேயே வக்கிரம் பெறுகிறார். அதேநேரத்தில் தனுசு இராசிக்குள் சஞ்சரிக்கும் சனியும் வக்ரம் பெறுகிறார். ஒரே வீட்டில் இரண்டு கிரகங்களும் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. சனி உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். குரு உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். எனவே இக்காலத்தில் உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் உருவாகலாம். சக பணியாளர்களால் தொல்லை ஏற்படும். தலைமைப் பதவியில் உள்ளவர்கள் உங்கள் குரலுக்கு செவிசாய்க்க மறுப்பர். தேனாகப் பேசும் உறவினர்களும் கூட பகையாவர். தெய்வ தரிசனங்கள் மட்டுமே உங்களுக்கு திருப்தியை வழங்கும்.

15.11.2020 இல் குருபகவான் மகர இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மகர இராசியில் குரு சஞ்சரிப்பார். அது குரு வலிமை இழக்கும் நீச்ச வீடாகும். உங்களைப் பொறுத்தவரை நீச்சம் பெறும் பொழுது தான் நல்ல பலன் கிடைக்கும். எனவே இது உங்களுக்கு அற்புதமான குருப்பெயர்ச்சி ஆகும். அப்போது 8, 10, 12 ஆகிய இடங்களைக் குரு பார்க்கப் போகிறார். எனவே இழப்புகளை ஈடுசெய்யப் புதிய வாய்ப்புகள் வரும். உழைப்பிற்கேற்ற பலனும் உண்டு. ஊர்மாற்றங்கள் திருப்தியளிக்கும்.

### ராகு - கேது பெயர்ச்சிக் காலம்

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேதுவும் 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகுவும் 1.9.2020 இல் பின்னோக்கிச் சென்று இடம்மாறி அமரப் போகிறார்கள். அதாவது இந்த ராகு - கேதுவின் பெயர்ச்சியின் விளைவாக கேது 2 ஆம் இடத்திற்கும் ராகு 8 ஆம் இடத்திற்கும் வரப்போகிறார்கள். அஷ்டமத்து ராகுவால் அலைச்சலும் ஆதாயக் குறைவும் உருவாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். ஊர்மாற்றங்கள், இடமாற்றங்கள் எதிர்பார்த்ததைப் போல அமையாது. இல்லத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளமாட்டார்கள். உத்தியோகத்தில் மாற்றங்கள் செய்யலாமா? அல்லது புதிய தொழில் தொடங்கலாமா? என்ற சிந்தனை உருவாகும்.

கேது 2 இல் நிற்பது அவ்வளவு நல்லதல்ல. குடும்பச்சுமை கூடுதலாக இருக்கும். எதையும் துணிந்து முடிவு செய்ய இயலாது. கொடுத்த வாக்கை காப்பாற்ற அதிக முயற்சி எடுக்க வேண்டியதிருக்கும். உறவினர்கள் உங்களுக்கு உதவி செய்வதாகச் சொல்லி விட்டுக் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். துணையாக இருப்பவர்கள் தோள்கொடுத்து உதவுவார்களா? என்பது சந்தேகம்தான். குடும்பத் தகவல்களை மூன்றாம் நபர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். ஆரோக்கியத்திலும் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய நேரம் இது. ஒருநோய் தீர்ந்தால் மற்றொரு நோய் வருவதற்கான அறிகுறி தென்படும். எனவே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. வெளிநாட்டில் இருப்பவர்கள் சொந்த ஊர் திரும்ப முடியாமல் தத்தளிக்கும் சூழ்நிலை உருவாகலாம்.

### சனிப்பெயர்ச்சிக் காலம்

வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடமான சகாய ஸ்தானத்தில் சனிபகவான் சஞ்சரிக்கிறார். 29.04.2020 முதல் 14.9.2020 வரை அவர், தனுசு இராசிக்குள்ளேயே வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான், வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. தாய்வழி ஆதரவு குறையும். இடம், பூமியால் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படலாம். எதிரிகளின் பலம் கூடும். பிள்ளைகளாலும் சில பிரச்சினைகள் உருவாகி மறையும். விற்ற சொத்துக்களில் வில்லங்கங்களும் சிக்கல்களும் உருவாகும். வாங்கிய சொத்துக்களால் வரும் இலாபம் குறையலாம்.

13.2.2020 முதல் 22.3.2020 வரை தனுசு இராசிக்குள் செவ்வாய் - சனி சேர்க்கை ஏற்படுகிறது. குரு வீட்டில் இந்தச் சேர்க்கை ஏற்படுவதால் பயப்பட வேண்டியதில்லை. குடும்பத்தில் நிச்சயித்த சில சுபகாரியங்களில் தாமதங்கள் ஏற்படும். குடியிருக்கும் வீட்டால் ஒரு சிலருக்கு பிரச்சினைகள் ஏற்படலாம்.




கொடுக்கல் - வாங்கலில் கவனம் தேவை. புதியவர்களை நம்பிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டாம். 03.05.2020 முதல் 17.06.2020 வரை தனுசு இராசியில் உள்ள சனிபகவான் கும்பத்தில் உள்ள செவ்வாயைப் பார்க்கிறார். செவ்வாய், சனி பார்வை அவ்வளவு நல்லதல்ல. குடும்பப் பிரச்சினை கொடிகட்டிப் பறக்கும். விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். தாய், தந்தையரின் உடல் நலத்தில் கவனம் தேவை.

26.12.2020 இல் உத்தராடம் 2 ஆம் பாதத்தில் மகர இராசிக்குச் சனி பகவான் பெயர்ச்சியாகிச் செல்கிறார். அது அர்த்தாஷ்டமச் சனியாகும். எனவே மிகமிக கவனத்தோடு செயற்பட வேண்டும். உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது. கடின உழைப்பின் மூலமே கனிவான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும். இக்காலத்தில் சனி பகவானை வழிபாடு செய்து வாருங்கள்.

### செல்வ வளம் தரும் வழிபாடு

வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து ஜீவ தீபம் ஏற்றி அம்பிகையை வழிபடுவது நல்லது. சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டி அருகில் உள்ள வைரவன்பட்டி வைரவர் ஆலயம் சென்று வைரவர், வளரொளிநாதர், வடிவுடையம்மனை வழிபட்டு வாழ்வை வளமாக்கிக் கொள்ளுங்கள்.

### குருவின் வக்கிர காலமும் பரிவர்த்தனை யோகமும்

27.03.2020 இல் மகர இராசிக்குள், குரு வக்கிர இயக்கத்தில் செல்கிறார். அங்கு 07.07.2020 வரை இருக்கிறார். அதேநேரத்தில் சனியும் தனுசு இராசியில் வக்கிரம் பெறுகிறார். இதனால் சனியும் குருவும் பரிவர்த்தனை யோகம் பெறுகிறார்கள். இந்த யோகம் நற்பலன்களைக் கொடுக்குமே தவிர கெடுபலன்களைக் கொடுக்காது. மேலும் மகர இராசியில் குரு நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிநாதனுக்கு பகைக் கிரகமான குருபகவான், நீச்சம் பெறுவதும் நன்மை தான். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கேற்ப எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படலாம். தடம் மாறிச் சென்ற உறவினர்கள் தானாகத் திரும்ப வருவர். வீடு கட்டும் எண்ணம் நிறைவேறலாம். கிரகங்கள் சஞ்சரிக்கும் நிலை சாதகமாக உள்ளது. புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் சூழ்நிலை உருவாகும்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டு விரயங்கள் அதிகரிக்கும் ஆண்டாக அமையப் போகிறது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். குடும்பச்சுமை அதிகரிக்கும். உறவினர்களைப் பகைத்துக்கொள்ள வேண்டாம். சுபகாரியங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துங்கள். கணவன் - மனைவிக்குள் அன்பும் அரவணைப்பும் அதிகம் இருந்தால்தான் குடும்ப ஒற்றுமை பலப்படும். தாய், தந்தையரின் உடல் நலத்தில் கவனம் தேவை. சகோதரர்களின் உதவி எதிர்பார்த்த அளவிற்கு கிடைக்காது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு சக பணியாளர்களால் தொல்லைகள் ஏற்படலாம். சம்பளப் பாக்கிகள் வருவதில் தாமதம் உருவாகும். திடீரென வரும் இலாகா மாற்றங்களும் ஊர் மாற்றங்களும் வந்து சேரும். அது திருப்தியளிக்கும் வகையில் அமையுமா? என்பது சந்தேகம்தான். அர்த்தாஷ்டமச் சனி, அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்க காலத்தில் அதிக கவனம் தேவை. ஆரோக்கியத்திலும் பாதிப்புகள் ஏற்படலாம். துர்க்கை மற்றும் வராகி வழிபாடு துயரங்களைப் போக்கும்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## எது கிடைத்தாலும் மகிழ்ச்சியே!



ஒரு சிறிய நாட்டை சிற்றரசன் ஒருவன் ஆட்சி செய்து வந்தான். தத்தன் என்ற காவலாளி அரண்மனையில் வாயில் காப்போனாகப் பணிபுரிந்து வந்தான்.

அவன் அரசனிடம் மிகுந்த விசுவாசம் கொண்டிருந்தான்.

அரசனைக் கொல்ல வந்த சில ஒற்றர்களை அவன் மிகவும் துணிவுடன் விரட்டி அடித்திருக்கிறான். சிலரைக் குத்திக் கொன்று அரசனைக் காப்பாற்றியிருக்கிறான். அவனுடைய ராஜவிசுவாசத்தை அறிந்த அரசன் அவனுடைய ஏழ்மை நிலையைப் போக்கக் கருதினான்.

ஒருநாள் பாத்திரம் நிறையப் பொன்னும் மணியும் போட்டு அதை இறுக மூடி காவலாளி வீட்டுக்குச் செல்லும் போது அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான் அரசன். அதைப் பெற்றுக் கொண்டு காவலாளி வீட்டுக்குச் செல்லும் போது ஒரு துறவி ஒரு பொன்னைக் கொடுத்து விட்டு அவனிடமிருந்த பாத்திரத்தைப் பெற்றுக் கொண்டான்.

பாத்திரத்தில் இருந்தது என்ன என்பது அவனுக்குத் தெரியாததால் ஒரு பொன்னை பெரிதாக நினைத்து மகிழ்ந்தான்.

அந்தப் பாத்திரத்தை துறவி அரசனிடம் கொண்டு போய்க் கொடுத்து இனாம் பெற்றுச் சென்றான். மறுநாளும் ஒரு பாத்திரத்தில் சில பொருட்களை வைத்து மூடி காவலாளி தத்தனிடம் கொடுத்தான் அரசன்.

அதையும் அரசாங்க ஊழியன் ஒருவன் இரண்டு பொன்களைக் கொடுத்து அவனிடமிருந்து பெற்றுக் கொண்டு சென்றான். அதைக் கொண்டு போய் அவன் அரசனிடம் கொடுத்து இனாம் பெற்றான்.

மூன்றாம் நாளும் ஒரு பாத்திரத்தில் ஒரு முத்து மாலையை வைத்து காவலாளியிடம் கொடுத்தான் அரசன்.

மற்றொரு அரசாங்க ஊழியன் மூன்று பொன்னைக் கொடுத்து காவலாளியிடமிருந்து பாத்திரத்தைப் பெற்றுக் கொண்டு சென்று அரசனிடம் கொடுத்தான்.

காவலாளி தத்தனின் வறுமை நீங்கவில்லை என்பதையும் அவன் ஆசைப்படவில்லை என்பதையும் அரசன் உணர்ந்தான்.

மீண்டும் ஒரு பாத்திரத்தில் பொன்னும் பொருளும் வைத்து தத்தனுக்குக் கொடுத்தான். அவன் அரசனை வணங்கி அதை வாங்கும் போது பாத்திரத்தின் மூடி திறந்து அதில் உள்ள பொன்னும் பொருளும் கீழே விழுந்தன. அப்போது தான் காவலாளி தத்தனுக்கு உண்மை தெரிய வந்தது.

அரசன் மூன்று தடவை கொடுத்த பாத்திரங்களை தன்னுடைய வறுமைப் புத்தியினால் "என்ன இருக்கிறது" என்று பாராமல் அப்படியே கொடுத்து விட்ட முட்டாள்தனத்தை நினைத்து தன்னை நொந்து கொண்டான் தத்தன்.

இம்முறை பாத்திரம் தத்தனிடம் சேர்ந்தது. அதில் உள்ளதை அவன் உணரச் செய்ததை எண்ணி அரசன் மகிழ்ந்தான். மனநிறைவு பெற்றான். வறுமையில் வாடுபவன் கிடைத்தது போதும் என்று நினைப்பான்.



த.இளமாறன், தரம் 8,
யா/செங்குந்தா இந்து தமிழ் பாடசாலை,
SOS கிராமம், ரோகினி இல்லம்.

## பொது அறிவு

- மயக்க மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?
  **சர் ஜேம்ஸ் சிம்சன்**
- வேதிப் பொருள்களின் அரசன் யார்?
  **கந்தக அமிலம்**
- லில்லி பூக்களையுடைய நாடு எது?
  **கனடா**
- உலகிலுள்ள இயற்கைப் பிரிவுகள் எத்தனை?
  **9 பிரிவுகள்**
- குடிநீருடன் கலக்கப்படும் வாயு எது?
  **குளோரின் வாயு**
- எகிப்தின் வெள்ளைத் தங்கம் எது?
  **பருத்தி**
- உலகின் மிகச்சிறிய நாடு எது?
  **வாடிகன்**
- மூக்கில் பல் உள்ள விலங்கு எது?
  **முதலை**
- யானையின் கர்ப்பகாலம் எவ்வளவு?
  **22 மாதங்கள்**
- ரேடியத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
  **மேரி க்யூரி**

மதிமோகன் மதுரா
தரம் 12 (2021), யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## பழமொழிகள்

- ஆனை படுத்தால் ஆள் மட்டம்.
- ஆனை வரும் பின்னே. மணி ஓசை வரும் முன்னே
- இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
- இங்கே தலை காட்டுகிறான். அங்கே வால் காட்டுகிறான்.
- இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.
- இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்.
- இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
- இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
- இரண்டு ஓடத்தில் கால் வைக்காதே.
- இரவற் சீலையை நம்பி இடுப்புக் கந்தையை எறியாதே.
- இல்லாது பிறாவது அள்ளாது குறையாது.

## விடுகதைகளும் விடைகளும்

- கூட்டுச் சேர்ந்து கோட்டை கட்டும். மாட்டுவோரை மடக்கித் தாக்கும். அது என்ன?
  **தேனீ**
- வளைஞ்சு நெளிஞ்சு ஆடும். தண்ணீர் குடித்தால் சாகும் அது என்ன?
  **நெருப்பு**
- தனித்து உண்ண முடியாது என்றாலும் இது சேர்த்தால்தான் உணவுக்கு சுவை, அது என்ன?
  **உப்பு**
- கலர்ப்பூ கொண்டைக்காரி, காலையில் எழுப்பிவிடுவாள். அது என்ன?
  **சேவல்**
- சொன்னதைச் சொல்லும் பொண்ணுக்கு, பச்சைப் பாவாடை கேட்குதாம் அது என்ன?
  **கிளி**
- தண்ணீர் இல்லாமல் வளரும் தரை இல்லாமல் படரும். அது என்ன?
  **உரோமம்**
- காலில்லாதவன் வளைவான், நெளிவான் காடு மேடெல்லாம் அலைவான் அவன் யார்?
  **பாம்பு**
- பல அடுக்கு மாளிகையில் இனிப்பு விருந்து. அது என்ன?
  **தேன்**

எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.

~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தலுக்காகத் தமிழ் மக்களை வாலாஜப்படுத்துகிறார் சம்பந்தர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக தமிழர்களின் பலத்தை மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கூறிய கருத்து தமிழ் மக்களிடம் சினத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாகத் தமிழர்களின் பலத்தை மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டுமென இரா.சம்பந்தர் கூறியிருப்பதானது தேர்தல் நெருங்கும் வேளையில், தமிழ் மக்களை வாலாஜப்படுத்துவதற்கானதேயன்றி வேறில்லை என்பதுதான் உண்மையானது.

விடுதலைப் புலிகளால் ஏற்படுத்தப்பட்ட கூட்டு என்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழ் மக்கள் ஆதரித்தனர்

எனினும் விடுதலைப் புலிகள் இல்லாத காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளால் தோற்றுவிக்கப்படவில்லை என இரா.சம்பந்தர் கூறினார்.

அவரின் இந்தக் கூற்று சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தாலும் அதுபற்றிக் குற்றம் கூறாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலன்சார்ந்து செயற்பட்டால் அது போதும் என்று மக்கள் நினைத்து கூட்டமைப்பை ஆதரித்தனர்.

ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தை முன்னிறுத்தி கூட்டமைப்பை சின்னாபின்னப்படுத்திய இரா.சம்பந்தர் தரப்பினர், தமிழ் மக்கள் தமக்கு வழங்கிய பேராதரவையும் தமிழினத்துக்கு எதிராகப் பயன்படுத்தினர்.

சுருங்கக்கூறின் பேரினவாத ஆட்சியாளர்களுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு தமிழர் தாயகத்தில் பௌத்த ஆக்கிரமிப்புக்கு இடம்கொடுத்தனர்.

தவிர, நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிய இரா.சம்பந்தர் தரப்பு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொய் வாக்குறுதி கொடுத்து அவர்களை ஏமாற்றினர். கூடவே, காணாமல் போனவர்களின் விடயம் தொடர்பில் எந்தக் கருசனையும் காட்டாமல் அந்த விடயத்தை அப்படியே அமிழ்த்திவிட்டனர்.

இதனையும் கடந்து அரங்கேற முடியாத அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை இந்தா வருகிறது, அந்தா வருகிறது என்று கூறிக் கூறியே காலம் கடத்தினர்.

ஈற்றில் கூட்டமைப்பு நல்லாட்சியுடன் சேர்ந்து தன்னலன்பேணியதேயன்றி தமிழ் மக்களுக்கு எதனையும் பெற்றுத் தரவில்லை.

இந்நிலையில் மீண்டும் பொதுத் தேர்தலை மையப்படுத்தி தமிழ் மக்களை வாலாஜப்படுத்தும் நோக்கில் கூட்டமைப்பினூடாகத் தமிழ் மக்களின் பலத்தை மீண்டும் நிரூபிப்போம் என இரா.சம்பந்தர் கூறியுள்ளார்.

யார் எந்தத் தந்திரத்தைப் பிரயோகித்தாலும் பட்டுத்தெளிந்த தமிழ் மக்கள் மிகவும் நிதானத்துடன் செயலாற்ற உள்ளனர்.

ஆகையால் சம்பந்தரின் வாலாஜத்தில் தமிழ் மக்கள் மயங்கப் போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

# தரம் 1 மாணவர் அனுமதி தொடர்பாக பெற்றோருக்கான வலயக்கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

2020 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 1 இல் பயில்வதற்கான மாணவர் தெரிவுப் பட்டியல் உரிய சுற்றறிக்கைகள் மற்றும் சட்டவிதிகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்டு, காட்சிப்படுத்தலுக்காக வலயக் கல்விப் பணிப்பாளரால் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அனுமதித் தெரிவுகள் நியாயமாகவும், நேர்மையாகவும். வெளிப்படைத் தன்மையுடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களைத் தவிர வேறு எந்த அறவீடும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

அனுமதிக்கு விண்ணப்பித்து அனுமதி கிடைக்கப்பெறாத சகல மாணவருக்கும் மாற்று ஒழுங்குகள் மூலம் தரம் 1ற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுக்கத் தான் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அல்லது மேற்படி தெரிவுகள் தொடர்பாகப் பெற்றோர்கள் வலயக் கல்விப் பணிப்பாளருடன் அல்லது நிர்வாகத்திற்குப் பொறுப் பான பிரதிக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வேறு மார்க்கங் களூடாக மேற்கொள்ளப் படும் முயற்சிகள் பயனற் றவை என்பதுடன் அவ ற்றை நம்பி ஏமாற்றமுற வேண்டாமெனவும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந் திரராஜா பெற்றோர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ஞா)

# தனியார் வாகன உரிமையாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

## வீதிப்பயணிகள் போ.அ.சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் கட்டணம் அறவிட்டுப் பாடசாலை சேவைகள் மற்றும் பயணிகள் சேவைகளில் ஈடுபடுகின்ற அனைத்துத் தனியார் வாகன உரிமையாளர்களும் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அதன் தலைவர் க.செவ்வேள் அறிவித் துள்ளார்.

விண்ணப்பப்படிவங்களை தலைமை அலுவலகத்திலோ அல்லது (Website-NP.gov.lk) என்ற இணையத் தளத்தின் மூலமோ பெற்றுக் கொள் ளலாம்.

மேலதிக தகவல்களை 0212215966 யாழ்ப்பாணம், 07731 24498 மன்னார், 021 229 0334 முல்லைத்தீவு, 0776016161 வவுனியா, 0212284920 கிளிநொச்சி ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (ஞா-10)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"நாம் நமக்காக ஒன்றாய் இணைவோம் காப்போம்" எனும் தொனிப்பொருளில் பொதுஅமைப்புக்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தேசநலன்விரும்பிகள் கலந்துகொள்ளும் கருத்தரங்கு ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள பாதுகாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரையும் கலந்து கொண்டு கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ஞா-09)

# ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின் 2019 தரம் 5 மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு திவ்ய மகால் மண்டபத்தில் யாழ் மருத்துவ பீடத்தின் அணு வைத்திய பிரிவு தலைவர் கலாநிதி தி.யோகநாதன் தலைமையில் இடம் பெறவுள் ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் திருமதி அ.சாந்தசீலன் கலந்து கொள்ளவுள்ளார். (ஞா)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

மனிதனை மனிதனாக்குவது உதவிகளும் வசதிகளும் அல்ல; இடையூறுகளும் துன்பங்களுமே!

-டபிள்யூ மேத்யூஸ்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **மன்னார் பிரதேசத்தில்** சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலை மன்னாா Palmyrah house, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத் தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட்சிற்றி, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### மனிதனின் உண்மை அடையாளம்



பற்றற்ற மனப்பான்மையை நீங்கள் பெற்றுவிட்டால் உங்களுக்கு நன்மையோ, தீமையோ எதுவும் இல்லை. நன்மை, தீமை என்ற வேறுபாட்டை உருவாக்குவதே சுயநலம் தான்.


இது புரிந்துகொள்ளச் சற்றுக் கடினமானது. ஆனால் நீங்கள் அனுமதிக்காமல் பிரபஞ்சத்தில் உள்ள எதற்கும் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான ஆற்றல் இல்லை என்பதைக் காலப்போக்கில் நீங்கள் புரிந்து கொள்ளவே போகிறீர்கள்.

ஆன்மா ஒரு முட்டாளாகி தன் சுதந்திரத்தை இழக்காதவரை ஆற்றலும் மனித ஆன்மாவை எதுவும் செய்ய முடியாது. பற்றின்மை என்பதன் மூலம் உலகின் மற்ற எதுவும் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்கவும் தவிர்க்கவும் செய்கிறீர்கள்.

நீங்கள் அனுமதிக்காத வரையில் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் உரிமை எதற்குமே கிடையாது என்று சொல்லிக் கொண்டிருப்பது எளிது. ஆனால் தன் மீது எதையும் ஆதிக்கம் செலுத்திவிடாத மனிதனின் உண்மை அடையாளம் என்ன? புறவுலகம் அவன்மீது செயற்படுவதன் காரணமாக சுகமோ, துக்கமோ அடையாத அவனது அடையாளம் என்ன? நல்லதோ, கெட்டதோ அவன் மனதில் எந்த மாறுபாட்டையும் ஏற்படுத்தாது. எந்தச் சூழ்நிலையிலும் அவன் சமமாக இருப்பான் இதுதான் அடையாளம்.

# ஒவ்வொரு சிக்சருக்கும் 250 டொலர் நன்கொடையாக வழங்கவுள்ளேன்

## அவுஸ்திரேலிய வீரர் டுவிட்



அவுஸ்திரேலியாவில் கட்டுப் படுத்த முடியாத அளவிற்கு கடு மையான காட்டுத்தீ பரவி வரும் நிலையில், நட்சத்திர கிரிக் கெட் வீரரான கிறிஸ் லின் அறி விப்பு ஒன்றினை வெளியிட்டுள் ளார்.

அவுஸ்திரேலியாவில் கடந்த ஒக்டோபர் மாதம் தொடங்கி வறண்ட வானிலை மற்றும் காற்றின் வேகம் காரணமாக கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு மெல்பேர்ன் நகரம் வரை காட் டுத்தீ பரவி வருகிறது.

இதனைக் கட்டுப்படுத்த தீய ணைப்பு படை அதிகாரிகள் மற்றும் தன்னார்வலர்கள் தொட ர்ந்து போராடி வருகின்றனர்.

பொதுமக்கள் பலரும் தங்க ளுடைய வீடுகளை இழந்து தவி த்து வருகின்றனர். தற்போது வரை 17 பேர் பலி யாகியி ருப்பதோடு, 18க்கும் அதிகமா னோர் மாயமாகியிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இதன்காரணமாக அவுஸ்தி ரேலிய முன்னணி விளையா ட்டு வீரர்கள் பலரும், நன் கொடை அளித்து உதவி செய்ய முன்வந்த வண்ணம் உள்ள னர்.

இந்த நிலையில் அவுஸ்திரே லிய கிரிக்கெட் அணியின் நட் சத்திர வீரர் கிறிஸ் லின் தன் னுடைய டுவிட்டர் பக்கத்தில், இந்த ஆண்டு பிக்போஸ் லீக் போட்டியில் நான் அடிக்கும் ஒவ் வொரு சிக்ஸருக்கும் 250 டொலர் நன்கொடையாக அளிக் கிறேன் என பதிவிட்டுள்ளார்.

மேலும், நாடெங்கிலும் உள்ள உயிர்களையும் சொத்து க்களையும் காப்பாற்ற போராடும் உண்மையான வீரர்களுக்கு பின்னால் பல்வேறு விளையாட்டு துறைகளில் இருந்து வீரர்கள் வருவது பெரும் சிறப்பு எனவும் தெரிவித்துள்ளார். (க)


**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# இந்தியாவுடனான கிரிக்கெட் தொடர் குசால் மெண்டிஸ்க்கு வாய்ப்பில்லை



இந்தியாவுக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில் இல ங்கை அணியில் விளையாடும் 11 வீரர்கள் பட்டியலில் குசால் மெண்டிஸ் இடம் பெறுவது சாத் தியமில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியா வுக்கு சுற்றுப் பயணம் மேற் கொள்ளும் இலங்கை அணி, 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் விளையாடவுள்ளது.

இதற்காக மலிங்க தலை மையிலான 16 அடங்கிய இல ங்கை இருபது-20 அணி நேற்று முன்தினம் இந்தியா புறப்பட்டது. இரு அணிகள் மோதும் முதல் இருபது-20 போட்டி நாளை கவுகாத் தியில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இந்திய சுற் றுப்பயணத்திற்கான இலங்கை அணியில் இடம் பெற்றுள்ள 25 வயதான நட்சத்திர வீரர் குசால் மெண்டிஸ், முதல் இருபது-20 போட்டியில் விளையாட வாய்ப்பு இல்லை என இலங்கை கிரிக் கெட் வட்டாரத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள் ளார்.


தேர்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரி கூறிய தாவது, மெண்டிஸ் அணியில் சேர்க்கப்படுவது தலைமை பயிற் சியாளர் மிக்கி ஆர்தரின் வற்பு றுத்தலின் பேரில் செய்யப்பட வில்லை, இது அனைத்து தேர் வாளர்களும் அணித் தலைவரு டனும் நன்கு விவாதிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு எனக்கூறி னார்.

இதன் மூலம் தொடர்ந்து மோசமாக விளையாடி வரும் மெண்டிஸ் அணியில் இடம்பெற வேண்டும் என தலைமை பயிற் சியாளர் மிக்கி ஆர்தர் மட்டுமே விரும்பினார் என்ற ஊகத்தை அவர் நிராகரித்தார்.

மேலும், மெண்டிஸ் முதல் போட்டியில் விளையாடாமல் இருக்கலாம், ஆனால் அவர் நம்பிக்கையை மீண்டும் பெற அணியில் சேர்க்கப்பட்டார். இந்த சுற்றுப்பயணத்தின் போது எங் கள் பயிற்சி ஊழியர்கள் அவரை ஊக்குவிப்பார்கள் என அவர் குறிப்பிட்டார். சுற்றுப் பயணத் திற்கு துணை அணித்தலைவர் தெரிவு செய்யவில்லை. அந்த நிலைமை ஏற்பட்டால், வீரரின் திறமையை பொறுத்து துணை அணித் தலைவர் அறிவிக்கப் படுவார்.

அணி நிர்வாகம் துணைத் தலைவரின் பெயரை அறி விக் கும், பின்னர் தேர்வாளர்களின் ஒப்புதல் தேவையில்லை என இலங்கை அணி மேலாளரும், இந்திய சுற்றுப் பயணத்திற்கான தேர்வாளருமான அசந்தா டி மேல் விளக்கினார். (க)

# கழுத்தை அறுத்து விடுவேன் ஆவேசமடைந்த பாகிஸ்தான் வீரர் வலுக்கும் எதிர்ப்புகள்



விக்கெட்டை வீழ்த்தியதும் கழுத்தை அறுத்துவிடுவதாக செய்கை செய்த பாகிஸ்தான் பந்து வீச்சாளரை இணையத்தள வாசி கள் கடுமையாக சாடி வருகின் றனர். அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் உள்ளூர் போட்டியான பிக்போஸ் லீக்கில் வெளிநாட்டு நட்சத்திரங்களும் கலந்து கொண்டு சிறப்பான ஆட் டத்தினை வெளிப்படுத்தி வரு கின்றனர்.

இதுவரை தேசிய அணியில் தேர்வு செய்யப்படாத பாகிஸ் தானை சேர்ந்த ஹரிஸ் ரவூப், மூன்று போட்டிகளில் விளையாடி 10 விக்கெட்டுகளை வீழ்த்தி அனைவரின் கவனத்தையும் பெற்றுள்ளார். Melbourne Stars அணிக்காக விளையாடி வரும் 26 வயதான ஹரிஸ், விக்கெட் டுகளை வீழ்த்திய பின்னர் தனது கழுத்தில் கைவைத்து, "கழு த்தை அறுத்து விடுவேன்" என் கிற செய்கையில் ஈடுபட்டு வரு கிறார்.

சிட்னி தண்டருக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் விக்கெட் எடுத்த பின்னர் சர்ச்சையான செய்கையில் ஹரிஸ் ஈடுபட்டி ருந்துள்ளார்.

இந்த வீடியோவானாது தற் போது இணையத்தில் வைரலாக பகிரப்பட்டு இணையத்தளவாசி களால் கடுமையாக விமர்சிக் கப்பட்டு வருகிறது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வோர்னர்- கோலி- ரோகித் சர்மா இவர்களே எனது சாதனையை முறியடிக்க வல்லவர்கள்

## லாரா தெரிவிப்பு



டெஸ்ட் கிரிக்கெட் வரலாற் றில் ஒரே இன்னிங்சில் 400 ஓட்டங்கள் விளாசிய தனது சாத னையை தற்போது உள்ளவர் களில் மூன்று வீரர்களால் முறி யடிக்க முடியும் என மேற்கிந்திய தீவு கிரிக்கெட் அணியின் இடது கை துடுப்பாட்ட வீரர் பிரையன் லாரா தெரிவித்துள்ளார்.

அபாரமான ஆட்டத்தால் எந்த வொரு காலகட்டத்திலும் தலை சிறந்த வீரர்களில் ஒருவராக கருதப்படுகிறார். டெஸ்ட் கிரிக் கெட்டில் ஒரு இன்னிங்சில் 375 ஓட்டங்கள் விளாசி அதிக ஓட் டங்கள் அடித்த வீரர் என்ற பெரு மையை பெற்றிருந்தார்.

அவுஸ்திரேலிய வீரர் மேத்யூ ஹெய்டன் 380 ஓட்டங்கள் அடி த்து அந்த சாதனையை முறிய டித்தார். ஆனால் ஹெய்டன் சாத னையை குறுகிய காலத்திற்குள் லாரா 400 ஓட்டங்கள் அடித்து முறியடித்தார். கிரிக்கெட் வர லாற்றில் இதுவரை 400 என்பது தான் உடைக்க முடியாத சாத னையாக இருக்கிறது.

இந்நிலையில் தற்போதுள்ள வீரர்களில் இவர்களால் என் னுடைய சாதனையை ஒரு வேளை முறியடிக்க முடியும் என லாரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து லாரா கூறு கையில், 4 ஆவது இடத்தில் களம் இறங்கி விளையாடி வரும் ஸ்டீவ் ஸ்மித்தால் என்னுடைய சாதனையை முறியடிக்க மிகவும் கடினமானது. அவர் சிறந்த வீரர் தான், ஆனால் பந்து வீச்சாளர்க ளுக்கு எதிராக ஆதிக்கம் செலு த்தி அவரால் விளையாட முடி யாது.

டேவிட் வோர்னர் போன்ற வீரர்களால் உறுதியாக முடியும். அதே போல விராட் கோலி முன்னதாகவே களம் இறங்கி னால் எட்டிவிடுவார். ரோகித் சர்மாவுக்கு அவருடைய நாளாக அமைந்தால் உடைத்துவிடுவார் எனக் கூறியுள்ளார். (க)

## குளித்தவர் அலை..

சேர்ந்த கந்தசாமி கஸ்தூரன் (வயது-26) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

நேற்று வெள்ளிக்கிழமை நண்பர்களுடன் செல்வச்சந்நிதி ஆலயத்துக்குச் சென்ற மேற்படி இளைஞர் தொண்டைமானாறு கடலில் நீராடி உள்ளார். இதன்போது கடலில் ஏற்பட்ட சுழியில் இளைஞர் சிக்கிக் கொண்டுள்ளார்.

நண்பர்கள் அவரை காப்பாற்ற முற்பட்ட போதும் அவர் சுழியில் இழுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து கடற்படையினரின் சுழியோடிகள் வரவழைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்பின்னர் இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சடலத்தை பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஞா-18,60,101)

## சிகிச்சை பலனின்றி.

கருணாநிதி சனசமூக நிலையம், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த யோகராசா மதுரா (வயது-12) என்ற பாடசாலை சிறுமியே உயிரிழந்தவராவார்.

மேற்படி சிறுமிக்கு காய்ச்சல், சத்தி என்பன இருந்ததாகவும் பின்னர் தலையில் சொறிவு ஏற்பட்டு அதற்கு சிகிச்சை பெற்றதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிறுமி காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் மரணமடைந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (ஞா-60)

## பயங்கரவாத...

யினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சர்வதேச தொடர்புகள் குறித்த துறைகள் சார்ந்த மதிப்பீட்டு குழுவினால் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த திருத்த சட்டமூலத்தில் உள்ளடங்கியுள்ள சில விதிகள் தொடர்பில் பல்வேறு தரப்பினரினால் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை கவனத்தில் கொண்டு இந்த திருத்த சட்டமூலத்தை விலக்கிக் கொள்வதற்காக வெளிநாட்டு தொடர்புகள் அமைச்சர் தினேஷ் குணவர்தன சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஞா)

## ஜனாதிபதி, பிரத...

தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சுவாரஸ்யமாக கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையைத் தொடர்ந்து சபை ஒரு மணி வரை ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர் சபாநாயகரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்து உபசாரத்தின்போதே இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருடனும் சம்பந்தன் கலந்துரையாடினார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் அருகில் இருந்தார். (ஞா)

## பாராளுமன்றம்...

யில் ஆரம்பமானது.

இதற்கமைய, பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி ஜனாதிபதியின் அக்கிராசன உரையை அடுத்து ஒரு மணி வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து சபாநாயகரின் அறிவிப்பு நேரம் மற்றும் விவாதங்களை அடுத்து பாராளுமன்றம் எதிர்வரும் 7ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஞா)

## எதிர்க்கட்சித்...

தலைமையில் இடம்பெற்ற அமர்வில் எதிர்க்கட்சி தலைவராக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சாவின் வெற்றிடத்திற்கு வருண பிரியந்த லியனகே சபாநாயகர் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## எதிர்க்கட்சிக்கு...

மாறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக அவர் தெரிவாகியிருந்தார்.

இந்தநிலையிலேயே, பாராளுமன்றத்திற்குள் அதிர்ச்சி வைத்தியமளித்துள்ளார். (ஞா)

## 26 ஆண்டுகளின்..

தலைவர் என்ற அந்தஸ்துடன் கழித்து வந்த ரணில் விக்கிரமசிங்க, சாதாரண பாராளுமன்ற உறுப்பினராகியுள்ளார்.

2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததால், ரணில் பிரதமர் பதவியை துறந்தார்.

இந்த காலப்பகுதியில் ஐ.தே.கவிற்குள் ரணிலின் தலைமைத்துவம் ஆட்டம் கண்டிருந்தது.

ரணில் பிரதமர் பதவியை துறந்த பின்னர் எதிர்க்கட்சி தலைவராக முயன்றார்.

எனினும், கட்சிக்குள் அவரது தலைமைத்துவம் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில், தவிர்க்க முடியாமல் சஜித்தை எதிர்க்கட்சி தலைவராக அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

1993ஆம் ஆண்டு முதல் பாராளுமன்றத்தில் பிரதமர் அல்லது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த ரணில் விக்கிரமசிங்க, 26 ஆண்டுகளின் பின்னர் சாதாரண பாராளுமன்ற உறுப்பினராகியுள்ளார்.

இலங்கை அரசியலில் ரணில் எனும் அரசியல் நாமத்தின் வீழ்ச்சியாக இது கருதப்படுகிறது. (ஞா)

## பலமான நிறை...

எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் ஆரம்பமானது.

இராணுவ மரியாதை, 21 மரியாதை வேட்டுக்கள் என்பன ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கமைய இரத்து செய்யப்பட்டதுடன், பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது.

ஜனாதிபதியின் வருகையை அடுத்து, பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் தேசியக் கொடி ஏற்றப்பட்டதன் பின்னர் சபாநாயகரால் ஜனாதிபதி வரவேற்கப்பட்டார்.

இதனையடுத்து, பாராளுமன்ற அக்கிராசனத்தில் அமர்ந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தார்.

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தை சபையில் சமர்ப்பித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பல்வேறு கொள்கை ரீதியான விடயங்களையும் முன்வைத்தார். (ஞா)

## பங்காளிக் கட்சி...

டத்தில் இறுதி உடன்பாடு எட்டப்பட்டதாக அறிய முடிகிறது.

நேற்றைய இணக்கப்பாட்டின்படி,

யாழ்.மாவட்டத்தில் - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 7, புளொட் 2, ரெலோ 1 வேட்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

வன்னி மாவட்டத்தில் - இலங்கை தமிழ் அரசுக் கட்சி 4, ரெலோ 3, புளொட் 2 வேட்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் - இலங்கை தமிழ் அரசுக் கட்சி 5, ரெலோ 2, புளொட் 1 வேட்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் மூன்று கட்சிகளிடமும் வேட்பாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால், அங்கு கட்சிகள் தம்மிடமுள்ள வேட்பாளர்களை பரிந்துரைப்பதென முடிவானது.

## கோட்டாவின் உரை 7, 8ஆம் திகதி விவாதம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை தொடர்பில், எதிர்வரும் 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளை விவாதம் ஒன்றை நடத்துவதற்கு நேற்று கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதற்கு அமைய குறித்த இரண்டு நாட்களிலும், பிற்பகல் ஒரு மணி முதல் மாலை 6.30 வரை இந்த விவாதம் இடம் பெறவுள்ளது.

சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் இடம்பெறுவதால், இதன்போது வாக்கெடுப்பு நடத்தப்படமாட்டாது. (ஞா)

வன்னி மாவட்டத்தில் மலையக வேட்பாளரை நியமிப்பது யார் என்ற குழப்பம் இன்னும் தீர்க்கப்படவில்லை. இந்த விவகாரம் மட்டுமே இழுபறி நிலையில் உள்ளதாக அறிய முடிகிறது. (ஞா)

## முல்லையில்...

முல்லைத்தீவு - கள்ளப்பாடு தெற்கு பகுதியில் 430 கிராம் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக் காலமாக இவ்வாறான போதைப்பொருட்கள் கைப்பற்றப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## சிங்கள மொழி...

பட வேண்டுமென அறுபத்து ஒன்பது லட்சம் மக்கள் விரும்புகின்றனர் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பெரும்பான்மை மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்து வைக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஆதரவாக கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வாக்களித்த அறுபத்து ஒன்பது லட்சம் வாக்காளர்களின் விருப்பின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் தேசிய சுதந்திர தின நிகழ்வின் போது சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் இசைக்கப்படும் என அவர் சுட்டிக்க ாட்டியுள்ளார். (ஞா)


மஹஜன சம்பத
திகதி 2020/01/03
சீட்டிழுப்பு இலக்கம் 4084
ஆங்கில எழுத்து L
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 3 1 6 4 1
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2020/01/03
சீட்டிழுப்பு இலக்கம் 0480
வெற்றி எழுத்து D
சுப்பர் இலக்க 17
வெற்றி இலக்கங்கள் 37 40 43 71

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு திகதி 03-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2350
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 10 37 67 74
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 03/01/2020
சீட்டிழுப்பு இலக்கம் -0247
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 08 33 36 47
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

சீட்டிழுப்பு வாரம்: 541
வர்ணம்: பச்சை
திகதி: 03.01.2020
வெள்ளி
U 13 28 38 42
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,052,930
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 03/01/2020
வெற்றி வாரம் 2727
வர்ணம் கடும்நீலம்
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 01 19 34 50
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000
2020/01/04 ம் திகதி சனிக் கிழமை இளம்நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 841
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.01.03
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,332,965/-
வெற்றி இலக்கங்கள் 23 38 65 77
ஆங்கில எழுத்து E
அபிவிருத்தி லொத்தர் சபை
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 311
சீட்டிழுப்பு திகதி 03.01.2020
சிவப்பு
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 03 34 69
விதி எண் 6
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 49,510,760
2020/01/08 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

## வேலைவாய்ப்பு

கடந்த வருடம் A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம்...

உங்கள் பெறுபேறுகளிற்கு ஏற்றவகையிலான பதவி வெற்றிடங்கள் உள்ளன. எவ்வாறான பெறுபேறாக இருப்பினும் அதற்கமைய வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும்.

- உங்கள் மாவட்டத்திலேயே வேலைவாய்ப்பினை பெற்றுகொள்ளலாம்.
- முதல் 50 நபர்களுக்கு முன்னுரிமை.
- விரும்புபவர் உங்கள் சுயவிபரக் கோவையுடன் தலைமை அலுவலகத்துக்கு சமுகமளிக்கவும்.

(1712)

மேலதிக தொடர்புகளுக்கு : 077 695 3242 / 077 174 3524

## பொருளியல்

S.JEYAKUMAR

(B.A (Hons) Econ Spl, M.A (Econ), PGDE)

(1689)

A/L 2022, 2020 Day Class

ஆரம்பம் :- 06.01.2020 திங்கள் 3.00 PM

இடம் : இருபாலை வீதி, கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகில்.)

தொடர்புகளுக்கு : 077 723 8597

## விற்பனைக்கு

1. DISABLE ELECTRIC SCOOTER
2. 2X ANTIQUE DRESSING TABLE
3. 4X ARM CHAIR' S

(1701)

TEL : 077 233 4197

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

(C-8836)

## சாவகச்சேரியில்...



வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=

கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(C-8786)

## மணமகள் தேவை

யாழ்இந்து, கௌரவ குடும்பம், 1987 ஆம் ஆண்டு, உயரம் - 5'6", பூரட்டாதி 2ஆம் பாதம், கி.பா - 39, சூரி + செவ்வாய் - 11இல், B.SC, M.SC (COMPUTER SCICNCE), அரச தொழில் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

எதிர்பார்ப்பு : அரசபதவி நிலை உத்தியோகத்தர், IT, PROFESSIONAL

தொடர்பு:
077 693 6744

(1651)

## A/L 2020 Day Class

வர்த்தகப்பிரிவு

ஆரம்பம் - 06.01.2020 திங்கள் 4.00 PM

| | | |
|---|---|---|
| பொருளியல் | : | S.Jeyakumar |
| வணிகக்கல்வி | : | T.S.Richi |
| கணக்கீடு | : | A.T.Suren |

இடம் : இருபாலை வீதி, கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகில்.)

தொடர்புகளுக்கு : 077 723 8597

(1689)

## இந்தியாவின் தலைசிறந்த கல்லூரியில் HOTEL MANAGEMENT with TRAVEL & TOURISM

கனடா,இலங்கை,பயணிகள் கப்பல் மற்றும் பல நாடுகளில் 5★ Hotel களில் வேலைவாய்ப்பு, இலட்சங்களில் சம்பளம்



(C-8785)

A/L எந்தப்பிரிவிலும் சித்தியடைந்தால் போதுமானது

CANADA MIGRATION PILOT V2 Travels 0768226243

## மணமகன் தேவை

89, உத்தரம் 4, பாவம் 68 1/2 லண்டன் Doctor பெண்ணிற்கு படித்த லண்டன் இலங்கை மணமகன் தேவை.

(1731)

துர்க்கா

திருமண சேவை

0778185978, 0750111122

## அராலியில் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

கஞ்சா வைத்து சுற்றிய பீடிகளுடன் நால்வர் கைதாகினர்.

நேற்று மாலை 6.30 மணியளவில் அராலி மேற்கு பகுதியில் வைத்தே குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் பயணித்த முச்சக்கர வண்டியும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

இவர்கள் நால்வரும் சங்கானை பிரதேசத்தினை சேர்ந்தவர்கள்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்த கைது இடம் பெற்றது.

குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (ஞா-104)

## MIS ICT COLLEGE

A/L ICT New Batch - 2020

Sunday 6.00 am

ஆரம்பத்திலிருந்து பாடத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு வினாத்தாள்கள் செய்யப்படும்

Python,HTML,CSS,PHP,SQL,Arduino with practicals

திரு.இ.குமரன்- B.Sc.

A/L ICT New Batch - 2022

Sunday 5.00 pm

(1672)

#74, Sabapathy Lane, Jaffna, Near KKS Road / Kaladdy Junction

Tamil / English Medium

Call: 077 6577359

## SUBRA

சித்தன் கேணி

### A/L வர்த்தகப்பிரிவு - 2022

| | |
|---|---|
| பொருளியல் | : S.ஜெயக்குமார் |
| வர்த்தகம் | : T.S.ரிஷி |
| I.C.T | : சுதர்சன் |
| கணக்கீடு | : A.சுபேசன், T.விஷ்வராஜ் |

### A/L கலைப்பிரிவு - 2022

| | |
|---|---|
| தமிழ் : | திரு.நாக.தமிழேந்திரன்<br>திரு.K.V.நவநீதன் |
| அளவையியல் | : R.P.சர்மா |
| இந்துநாகரிகம்<br>இந்து சமயம் | T.ஸ்ரீநீஸ் |
| நாடகமும் அரங்கியலும் | : வினோதன் |
| அரசியல் | : G.N.நிர்மலா |
| புவியியல் | : S.S.ஐங்கரன்<br>P.V.தினேஸ் |
| பொருளியல் | : S.ஜெயக்குமார் |
| வரலாறு | : பிரதீபன் |
| தொடர்பாடலும் ஊடகற்கையும் | : V.நவநீதன் |
| I.C.T | : சுதர்சன் |
| பொது உளச்சார்பு | : T.தவசேகர் |

(1696)

ஆரம்பம் 05.01.2020 ஞாயிறு காலை 9.00 மணி
கனித, விஞ்ஞானப் பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 / 021 567 1532

## NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி

A/L

கலைப் பிரிவு 2022

| | | | |
|---|---|---|---|
| தமிழ்<br>A.K. கீர்த்திராஜன் | இ.நாகரிகம்<br>M. செல்வா | அளவையியல்<br>P. கமல் / T. மோகன் | அரசியல்<br>R. பாலகாந்தன் |
| புவியியல்<br>S.P. கரன் | வரலாறு<br>S.S. தாஸ் | நா.அரங்கியல்<br>I. பிரபா | ஊடகவியல்<br>M. கோணேஸ் |
| ICT<br>T. தேவதர்ஷன் | கிறிஸ்தவம்<br>K. சரோன் | ஆரம்பம்: 05.01.2020<br>ஞாயிறு காலை 9.00 மணி | |

(C-8840)

## NEW SCIENCE HALL

Kannathiddy Road, Jaffna

Chemistry
A/L - 2022

By. G. BENO (B.Sc, PGDE)

Tamil Medium - Sat, Sun 7.30 - 9.30 a.m
English Medium - Sat, Sun 3.30 - 5.00 p.m

சமாந்தரமாக இரு அலகுகளின் கற்பித்தல்.
மாதாந்தப் பரீட்சைகள், மதிப்பீடுகள்.
கடந்தகால வினாவிடை வகுப்புக்கள்.

(1704)

ஆரம்பம் - 04 / 01 / 2020 Saturday

## NEC

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி

வர்த்தகப் பிரிவு A/L 2022

கணக்கீடு
K.பாலகஜன்

வணிகக்கல்வி
SK.பாலசபேஷ்

பொருளியல்
S.ஜெயக்குமார் V.ஜெகதீஸ்

(C-8840)

ஆரம்பம்: 05.01.2020 ஞாயிறு காலை 9.00 மணி

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.